# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்

திருக்குடமுழுக்கு



விழா மலர்

மதுரை

ஏப்ரல் 1976

விலை ரூ. 1

T
7027

**Extra Care and Scientific TVS Retreading**
**Yield More Miles per Tyre**
**More Tyre Miles per Rupee**

•

We lay the tread the way it is done on
NEW TYRES

•

Get your tyres retreaded by TVS
the largest retreaders in India



## SUNDARAM INDUSTRIES LIMITED
MADURAI

Factories at:

* BANGALORE * COIMBATORE * MADRAS
* PUDUKKOTTAI * SECUNDERABAD * TIRUNELVELI
* VIJAYAWADA * SALEM * ERNAKULAM
* VISAKHAPATNAM * MANGALORE

( A MEMBER OF THE TVS GROUP OF COMPANIES )

அருள்மிகு
மதுரவல்லி சமேத வியூகசௌந்தரராஜ பரப்ரஹ்மணே நம:



மலர்மடந்தை மண்மடந்தை இருபாலும் திகழும்
அருள்மிகு கூடல் அழகர் திருக்கோலம்



திரு. P. A. C. R. ராமசுப்ரமணிய ராஜா, B. Sc., அவர்கள்
தலைவர், திருப்பணிக் குழு,

# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்

## மதுரை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

ஆணையர்:

**திரு. M. K. பாலசுப்பிரமணியம், I. A. S.**

சென்னை.

துணை ஆணையர்:

**திரு. K. சிதம்பரம், B. A.,**

மதுரை.

உதவி ஆணையர்:

**திரு. N. சீனிவாசன், B. A., B. L.,**

மதுரை.

# நன்றியுரை

சீரும் சிறப்பும் பெற்ற கூடல் என்னும் இம்மதுரை மாநகரந்தன்னில் கவளமால் யானை கொன்ற கண்ணனே கூடல் அழகராய் அடியார்களை அழைத்து அபயம் அளிக்கும் அண்ணலாய்த் திகழ்கிறார்.

இத்திருக்கோயில் தொன்மையும் மேன்மையும் ஒருங்கே சேரப்பெற்றது; கண்கவர் வனப்பினது.

இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்து புதுமை நலம் சேர்விக்கத் திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பெற்றது. தொழிலதிபர் திரு. **P. A. C. R. ராமசுப்பிரமணிய ராஜா** B. Sc., அவர்களின் சீரிய தலைமையில் திருப்பணிக்குழு முழுமூச்சுடன் செயலாற்றியது. குழுவின் செயலாளராகவும் அப்போது திருக்கோவில் நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றிய திரு. **N. சிவனாண்டி** B. A., அவர்கள் இரவுநன் பகலும் இடைவிடாது அருந்தொண்டாற்றித் திருப்பணிகள் விரைவுடன் நிறைவேறப் பெரிதும் காரணமாக இருந்தார்கள். இவ்விருவருக்கும் ஒல்லும்வகையெல்லாம் உறுதுணை நின்ற திருப்பணிக்குழு உறுப்பினர்கள் பெரிதும் பாராட்டுக்குரியவர்கள்.

திருக்குடமுழுக்கு நன்னாளன்றே இம்மலரை வெளியிட முனைந்தார்கள். குடமுழுக்குப் பெரும்பணியில் முழுநேரத்தைச் செலவிட நேர்ந்ததாலும் மேலும் பல விளம்பரங்கள் சேகரிக்க வேண்டியிருந்ததாலும் குடமுழுக்கு விழாப் புகைப் படங்களையும் சேர்க்க விரும்பியதாலும் இம்மலர் சற்றுத் தாழ்த்தே உங்கள் திருக்கரங்களை அணிசெய்ய வருகிறது.

இம்மலரை சீரிய முறையில் உருவாக்கும் பணியில் ஈடுபட்ட பேராசிரியர் திரு. **இரா. அரங்கராஜன்** M. A., B. T., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மலரைச் சீரியமுறையில் நிறைவேற்றி வெளிக்கொணரும் நற்பணி அடியேனுக்கு வாய்த்தது கூடல் அழகரின் இன்னருளே காரணமாகும்.

இம்மலரை சீரிய விழாவில் சிறப்பாக வெளியிட்ட மதுரைத் துணை ஆணையர் திரு. **K. சிதம்பரம்** B. A., அவர்களுக்கு எங்களது பணிவன்புடன் கூடிய நன்றி உரித்தாகும்.

- இறுதியாக, இம்மலரை மலர்வித்தவர்கள்
- கட்டுரை நல்கி கவின் சேர்த்தவர்கள்
- விளம்பரம் அளித்து நறுமணம் ஊட்டியவர்கள்
- அழகுடன் அச்சிட்ட அழகு அச்சகத்தினர்

அனைவருக்கும் எமது நன்றி. ஸ்ரீ கூடலழகர் ஸுப்ரபாதம் முதலிய தோத்திரங்களை அச்சிட்டுக் கொள்வதற்கு அனுமதி வழங்கிய காஞ்சீ மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. **P. B. அண்ணங்கராச்சாரியார் சுவாமி** அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கங்கள்.

இங்ஙனம்,

மதுரை-1.
1—1—1977

**A.** பட்டாபி சுப்ரமணியன், B. Sc.,
நிர்வாக அதிகாரி,
ஸ்ரீ கூடலழகர் திருக்கோயில்.

# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்
# கும்பாபிஷேகச் சிறப்பு
# மலர்க் குழு

திரு. P. A. C. R. ராமசுப்ரமணிய ராஜா, B. Sc,
தொழிலதிபர், தலைவர்

திரு. R. A. கிருஷ்ணன், B. A., F. C. I. S.
இயக்குநர் – பென்னர் இந்தியா, அமைப்பாளர்

திரு. இரா. அரங்கராஜன், M. A., B. T., பதிப்பாசிரியர்

திரு. N. சிவனுண்டி, B. A., செயலாளர் & பொருளாளர்,
(நிர்வாக அதிகாரி)

# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்

## தொடர் லட்சார்ச்சனைக் குழு

திரு. T. ஸ்ரீநிவாஸராகவன், B. A., B. L., வழக்கறிஞர். தலைவர்
திரு. C. R. கிருஷ்ணமாச்சாரி, வெங்கடாசலம் & கோ, துணைத் தலைவர்
திரு. N. சிவனுண்டி, B. A., (நிர்வாக அதிகாரி) செயலாளர் & பொருளாளர்

உறுப்பினர்கள் :

திரு. V. கோபால்
திரு. N. ராமஸ்வாமி அய்யங்கார், B. com.,
திரு. M. R. G. கோபால்சாமி
திரு. R. அரங்கராஜன், M. A., B. T.,
திரு. E. M. G. சௌந்தரராஜன்
திரு. N. V. C. நடராஜன் செட்டியார்
திரு. M. அழகர்சாமி நாயுடு
திரு. M. ராமக் கோனர்
திரு. S. M. சங்கரஞ் செட்டியார்
திரு. K. சுப்பிரமணியன்
திரு. R. L. R. ராதாகிருஷ்ணன்
திரு. கிட்டப்பா செட்டியார்


Grams: "SARATHI"

Phones: Factory: 22125
Resi : 22510

**SARATHI & Co.,**

**Fast Colour Yarn Dyers & Bleachers**

Manufacturers of :
Quality Handloom Textiles

*160, Ramnad Road*
Post Box No. 45
*MADURAI-625009*

Managing Partner :
A. R. SAHASRANAM, L. T. C. (Hons).
F. R. S. A. (London), Dip-in-Dyeing (Leeds)

Grams: "PRIMO" Phone: 25071

**Venkateswara Chem Dyes**

**Dealers in Dyes and Chemicals**
**72, South Masi Street,**
**MADURAI - 625001.**

Distributors for :
M/s. Amar Dye-Chem Limited,
Bombay - 400016
And
Dealers in Dyes & Chemicals

Managing Partner :
A. R. SAHASRANAM, L. T. C. (Hons).
F. R. S. A. (London), Dip-in-Dyeing (Leeds)

# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில்

## திருப்பணியை செவ்வனே செய்துதந்த

## திருப்பணிக் குழு

திரு. P. A. C. R. இராமசுப்பிரமணியராஜா, B. Sc., தலைவர்
திரு. V. கோபால், துணைத் தலைவர்
திரு. N. சிவனாண்டி, B. A., (நிர்வாக அதிகாரி) செயலாளர் & பொருளாளர்
திரு. S. முனியப்பன் உறுப்பினர்
திரு. K. L. வெங்கடேசன் ,,
திரு. A. சிவனாண்டி ,,
திரு. M. A. சொக்கலிங்கம் ,,
திரு. E. சோணைமுத்து ,,
திரு. K. S. சந்தானம் ,,
திரு. P. M. ராமக் கோனார் ,,
திரு. A. நரசிங் ,,
திரு. N. ராமசாமி அய்யங்கார், B. Com., ,,
திரு. R. அரங்கராஜன், M. A , B. T., ,,
திரு. C. R. நரசிம்ம அய்யர் ,,
திரு. T. கோவிந்தராஜுலு நாயுடு ,,
திரு. R. சக்திமோகன் ,,
திரு. A. R. மாதவன் ,,
திரு. A. S. பாண்டிய நாடார் ,,
திரு. M. ராமசாமி வேளார் ,,
திரு. A. மெய்யணன் ,,
திரு. A. ராமநாதக் கோனார் ,,
திரு. E. M. G. சௌந்தரராஜன் ,,
திரு. M. S. கோவிந்தப் பட்டர் ,,

பவுன், தங்க நகைகளுக்கு சிறந்த இடம்!

# ஸ்ரீ சிவாசன் ஜுவல்லர்ஸ்

போன்: 22802

S. பாலசுந்தரம் செட்டியார்

பவுன், தங்க நகை வியாபாரிகள்,

47, காண்சாமேட்டுத் தெரு,

மதுரை-625001.

கூடலழகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் காண வரும் பக்தகோடிகளுக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்!

## M. காசி

(போட்டோ கிராபர்)

போன்: 31963

மாலை முரசு ஆபீஸ் எதிர்புரம்,

16, T. P. K. ரோடு,

மதுரை - 625001.

கும்பாபிஷேக மலருக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்!

## சிவா மில் ஸ்டோர்

திண்டுக்கல் ரோடு,

மதுரை - 625001.

With the best compliments :

**SHANTHI SILK EMPORIUM**

An Exclusive Show Room for Kanchipuram
Dharmavaram, Banaras Silk Fabrics,
Cotton And Other Mill Goods

5, Sannadhi Street
Mylapore, MADRAS-600004
Phone: 74403



எல்லாவிதமான பேப்பர், அட்டை
கலிக்கோ, ஸ்டேஷனரி சாமான்கள்
வாங்குவதற்கு சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ரீ மீனாட்சி அன் கோ.,**

45-A, கீழ ஆவணி மூல வீதி,
மதுரை - 625001.

மதுரை அருள்மிகு கூடலழகர்
திருக்கோயில் திருக் குடமுழுக்கு
விழாவிற்கு நல்வாழ்த்துக்கள்!

Grams: "NATHELLA"
Post Box No. 1625

Phone { Show Room: 32002 & 35937
Residence : 661725

## நாதெள்ள சம்பத்து செட்டி & சன்

தங்க நகைகள் மற்றும் வைர வியாபாரிகள்,

177, N. S. C. போஸ் ரோட், சென்னை-600001.

## அருள்மிகு மதனகோபாலசுவாமி திருக்கோயில், மதுரை.

### திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

மதுரை மாநகரில் அருள்மிகு கூடலழகர் கோயிலுக்கு அருகே வடபுறத்தில் மேலமாசி வீதியில் இயற்கைச் சூழலில் மூலவர் வேணுகோபாலனாக புல்லாங்குழல் இசைத்துக்கொண்டு ருக்மணி, சத்ய பாமாவுடன் வீற்றிருக்கிறார். உற்சவர் எழில் பொங்கும் ''மதனகோபாலராக'' எழுந்தருளியிருக்கிறார். சுமார் நூற்றாண்டுகளுக்கு முன் இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்யும்பொழுது, இத்திருக்கோயிலிருந்த அழகிய வேலைப்பாடு மிக்க கண்கவர் சிற்பத் தூண்களை ஏலம் எடுத்து அமெரிக்காவில் உள்ள பெலடல்பியாவிற்கு கொண்டு சென்று, அங்கு இத்திருக்கோயில் மண்டபங்கள் போல் அமைத்துள்ளார்கள் என்ற செய்தி இத்திருக்கோயிலின் சிறப்பை எட்டுத் திக்கிற்கும் இயம்புகின்றன.

இத்திருக்கோயிலில் தற்சமயம் திருமண மண்டப உணவு விடுதி, சுற்று புற கல் தளவரிசை முன் வளைவு போன்ற பல திருப்பணி வேலைகள் துவங்க இருக்கின்றன. மெய்யன்பர்கள் அன்பு கூர்ந்து திருப்பணிக்கு நன்கொடையளித்து மாயோன் அருள்பெறுமாறு வேண்டுகிறோம்.

இவண்,

R கோவிந்தராஜன், பி. எஸ்ஸி.,
நிர்வாக அதிகாரி,

ஸ்ரீ:

ஸ்ரீ கூடலழகர் மதுரவல்லித் தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் முதலாயிரத்தில் முதற் பிரபந்தமாகிய

# திருப்பல்லாண்டு

— பொங்கும் பரிவாலே பெரியாழ்வார் அருளிச் செய்தது —

## பொதுத் தனியன்கள்

(நம்பெருமாள் அருளிச்செய்தது)

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் || (1)

** திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளுக்குப் பாத்திர மானவரும், ஞானம் பக்தி முதலிய நற்குணங்களுக்குக் கடல் போன்றவரும், எம்பெருமானார் பக்கலில் பக்தியையுடையவருமான மணவாள மாமுனிகளை வணங்கு கிறேன்.

(கூரத்தாழ்வான் அருளிச் செய்தது)

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுந மத்யமாம் |
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் || (2)

** எம்பெருமானைத் தொடக்கத்திலே உடையதாய், ஸ்ரீமந் நாதமுனிகளையும் ஆளவந் தாரையும் இடையிலே உடையதாய், எமக்கு ஆசாரியரான எம்பெருமானாரை முடிவிலே உடையதான ஆசார்ய பரம்பரையை வணங்குகிறேன்.

(இதுவும் ஆழ்வானருளிச் செய்தது)

யோ நித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே || (3)

** எந்நாளும் எம்பெருமானது திருவடித் தாமரையிணைகளாகிற பொன்கட்டியிலுள்ள மிகுந்த விருப்பத்தினாலே அத்திருவடிகளுக்குப் புறம்பாயுள்ள விஷயங்களைத் துரும்பாக நினைத்துத் தள்ளிவிட்டவரும், எமக்கு ஆசாரியராய் ஸமஸ்த கல்யாண குண பரிபூரண ராய்த் திருவருட்கடலாயிருப்பவருமான எம்பெருமானாருடைய திருவடிகளை உபாய மாகப் பற்றுகிறேன்.

(ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேநமதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா || (4)

** என்னைச் சேர்ந்தவர்களுக்கு எப்போதும் தாய் தந்தை மாதர் மக்கள் செல்வம் மற்று முள்ள எல்லாமும் ஆழ்வாருடைய திருவடிகளே, நமக்குக் குல முதல்வரான அவ் ஆழ்வாருடைய, மகிழ மலர்களால் அழகுபெற்று விளங்குகின்ற அந்தத் திருவடி யிணையைத் தலையால் வணங்குகின்றேன்.

(ஸ்ரீ பராசர பட்டர் அருளிச் செய்தது)

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ர மிச்ராந்
ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம் || (5)

** பூதத்தாழ்வாரையும் பொய்கையாழ்வாரையும் பேயாழ்வார் பெரியாழ்வார் திருமழிசை யாழ்வார் குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் ஆகிய இவர்களையும் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கையாழ்வார் எம்பெருமானார் ஆகிய இவர்களையும் நம்மாழ் வாரையும் நாள்தோறும் சேவிக்கிறேன்.

## திருப்பல்லாண்டுத் தனியன்கள்

(ஸ்ரீமந் நாதமுனிகள் அருளிச் செய்தது)

குருமுக மநதீத்ய ப்ராஹவேதாந் அசேஷாந்
நரபதி பரிக்ல்ப்தம் சுல்கமாதாது காம: |
ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்
த்விஜகுல திலகம்தம் விஷ்ணுசித்தம் நமாமி || (1)

** வல்லபதேவன் என்கிற அரசனால் ஏற்படுத்தப்பட்ட பந்தயப் பொருளாகிய பொற்கிழியை கிரஹிக்க எண்ணமுடையவராய், ஆசாரிய முகமாய் ஒரு கல்வியையும் கற்காமலே (பரதத்துவ நிர்ணயத்திற்கு வேண்டிய) வேதங்கள் எல்லாவற்றையும் (பகவத் க்ருபையினால்) எடுத்துரைத்தவரும் தேவர்களினால் சேவிக்கத் தகுந்தவரும் திருவரங்க நாதனுக்கு நேராக மாமனாரும் பிராம்மண குலத்திற்குத் திலகம் போன்றவருமான பெரியாழ்வாரை வணங்குகிறேன்.

(பாண்டிய பட்டர் அருளிச் செய்தவை)

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூர் என்றொருகால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம் — முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம் கீழ்மையினிற் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து. (2)

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கமெடுத்தூத — வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று. (3)

ஸ்ரீ:

பொங்கும் பரிவாலே பெரியாழ்வார் அருளிச்செய்த

# திருப்பல்லாண்டு

** பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா *
உன் சேவடி செவ்வி திருக்காப்பு. (1)

** அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றியாயிரம் பல்லாண்டு *
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு *
வடிவார் சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு *
படைபோர்புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே (2)

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமுங் கொண்மின் *
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் *
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர்வாழ் * இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (3)

ஏடுநிலத்திலிடுவதன் முன்னம்வந்து எங்கள் குழாம் புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்தொல்லைக் கூடுமினோ *
நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாயவென்று *
பாடுமனமுடைப் பத்தருள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே. (4)

அண்டக்குலத்துக் கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தை எடுத்துக்களைந்த இருடீகேசன்தனக்கு *
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது ஆயிரநாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே (5)

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி *
வந்து வழிவழியாட் செய்கின்றோம் * திருவோணத் திருவிழவில்
அந்தியம் போதில் அரியுருவாகி அரியை அழித்தவனைப் *
பந்தனைதீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே. (6)

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் *
கோயிற் பொறியாலே ஒற்றுண்டுநின்று குடிகுடியாட் செய்கின்றோம் *
மாயப் பொருபடைவாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதி
பாய * சுழற்றிய ஆழிவல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (7)

நெய்யிடை நல்லதோர்சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும் *
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும் *
மெய்யிடை நல்லதோர் சாந்தமும் தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப் பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே (8)

உடுத்துக்களைந்த நின் பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *
விடுத்த திசைக் கருமந் திருத்தித் திருவோணத் திருவிழவில் *
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. (9)

எந்நாளெம்பெருமான் உன்றனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட
வந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்றுய்ந்ததுகாண் *
செந்நாள் தோற்றித் திருமதுரையுட்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத் தலைப்பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே. (10)

** அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானுமுனக்குப் பழவடியேன் *
நல்வகையால் நமோ நாராயணாவென்று நாமம் பல பரவி *
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுவனே (11)

** பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் *
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாய வென்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே (12)

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

(அ) பெரியாழ்வாரையும் திருப்பல்லாண்டையும் பற்றி மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையில் அருளிச் செய்தவை.

இன்றைப் பெருமை அறிந்திலையோ ஏழைநெஞ்சே!
இன்றைக் கென்னேற்றமெனில் உரைக்கேன் — நன்றிபுனை
பல்லாண்டு பாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த
நல்லானியில் சோதி நாள். (16)

மாநிலத்தில்முன் நம் பெரியாழ்வார் வந்துதித்த
ஆனிதன்னில் சோதியென்றால் ஆதரிக்கும் — ஞானியர்க்(கு)
ஒப்போரில்லை இவ்வுலகுதனில் என்று நெஞ்சே!
எப்போதும் சிந்தித் திரு. (17)

மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்களார்வத்தளவு தானன்றிப் — பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர். (18)

கோதிலவாம் ஆழ்வார்கள் கூறுகலைக் கெல்லாம்
ஆதி திருப்பல்லாண்டானதுவும் — வேதத்துக்(கு)
ஓமென்னு மதுபோல் உள்ளதுக் கெல்லாம் சுருக்காய்
தான் மங்கல மாதலால். (19)

உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான் ?
உண்டோ பெரியாழ்வார்க்கு ஒப்பொருவர் ? — தண்டமிழ்நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில் அவர்செய்கலையில்
பைதல் நெஞ்சே ! நீ உணர்ந்து பார். (20)

(ஆ) பெரியாழ்வார் விஷயமாக கோதாஸ்துதியில் ஸ்ரீவேதாந்த தேசிகன் அருளிச் செய்தது.

தாதஸ்து தே மதுபித : ஸ்துதிலேச வச்யாத்
கர்ணாம்ருதை : ஸ்துதிசதை ரநவாப்த பூர்வம் |
த்வந் மௌளி கந்த ஸுபகா முபஹ்ருத்ய மாலாம்
லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம் ||

(இ) கூடலழகரை வழிபட்டுப் பேறு பெற்றவர்கள்,

* வில்லாண்ட வடவரையான் மணம்புணர அட்டாங்க
விமான மென்னும்
இல்லாண்டு புயன் சனகன் காசிபனுர் பிருது
அம்பரீடன் கூடல்
தொல்லாண்ட புரூரவசு மலயகேதனன் முதலோர்
தொழப் புத்தூரான்
பல்லாண்டு பாடவந்த மல்லாண்ட தோளனடி
பணிதல் செய்வாம்.

(ஈ) மதுரவல்லித் தாயார்

மதியிருக்கும் திருமுகமும் கனியிருக்கும் துவர்வாயும்
வழுத்து மன்பர்
துதியிருக்கும் குழைக்காதும் புயலிருக்கும் குழற்காணும்
துணைக்கண் மானும்
பதியிருக்கும் பொருப்பனைய கனதடமும் துடியிடையும்
பதுமக் கையும்
மதியிருக்கும் கொடிபோன்ற மதுரவல்லியார்
பதம் கருத்துள் வைப்பாம்.

**ஸ்ரீ காஞ்சி மஹாமஹிமோபாத்யாய ப்ரதிவாதி பயங்கரம்**

**ஸ்ரீ உப. வே. அண்ணங்கராசார்யர் அருளிச்செய்த**

# ஸ்ரீவ்யூஹஸுந்தரராஜ ஸுப்ரபாதம், ஸ்ரீ ஸுந்தர ஸ்துதி, ஸ்ரீ ஸுந்தரராஜ ப்ரபத்தி, ஸ்ரீ ஸுந்தரராஜ மங்களம்.

கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே |
உத்திஷ்ட நரசார்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் ||
உத்திஷ்டோத்திஷ்ட கோவிந்த உத்திஷ்ட கருடத்வஜா |
உத்திஷ்ட கமலா காந்த த்ரைலோக்யம் மங்களம் குரு. ||

1 கிஸலய ஸுகுமாரம் ப$_4$க்த ரக்ஷக தீ$_3$க்ஷம்
ப்ரபு$_4$வர மது$_4$ராயா: ஸ்ரீமத: பாத$_3$ பத்$_3$மம் |
ஹ்ருதி$_3$ த$_3$த$_4$த உபேதா: சேஷசேஷாசநாத்$_4$யா:
த்யஜநநு சயநம் தே ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரபா$_4$தம் ||

2 சசத$_4$ர ரவிமுக்$_2$யா தே$_3$வதா ஸார்வ பௌ$_4$மா:
தவபத$_3$யுக$_3$ ஸக்தா: ஸுந்த$_3$ர ஸ்ரீபதேபோ$_4$: |
கர த்$_4$ருத குஸுமாட்$_4$யாஸ் ஸங்க$_1$தாஸ் ஸந்தி ப$_4$க்த்யா
பரிஹர சயநீயம் ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

3 பரமபுருஷ லக்ஷ்மீநாத$_2$ நாதே$_2$ த்யஜஸ்ரம்
ஸ்துதி சத முக$_2$ராஸ்யா நாரத$_3$ாத்$_4$யாஸ் ஸமேதா:
கமலநயந சேஷிந் ஸுந்த$_3$ர ஸ்ரீபதே போ$_4$:
விஜஹிஹி சயநம் த்$_3$ராக் ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

4 கலிகலுஷ ஸமூலோந் மூலநார்த்த$_2$ாவ தாரா:
ப்ரத$_2$ம முநிவரேண்யா: ஸ்ரீஸரோயோகி$_3$ முக்$_2$யா: |
த்ரய இஹ ஸமுபேதா: ஸுந்த$_3$ர ப்ராப்தவந்த:
ஜஹிஹி சயநமீச ஸ்யாத$_3$ஹோ[1] ஸுப்ரபா$_4$தம் ||

5 திமிர மகி$_2$லமாஸீத் த்$_4$வஸ்தமஹ்நாமதீ$_4$ச:
நிஜகிரண ஸஹஸ்ரம் த்$_4$யோதயந் ப்ராது$_3$ராஸீத் |
ஸ ச ஸமுபக$_3$தோபூ$_4$த் ப$_4$க்திஸாரோ முநீந்த்$_3$ர:
ப்ரபு$_4$வர மது$_4$ராயா: ஜாக்$_3$ருதாத் ஸுப்ரப$_4$ாதம் ||

6 கிரதி தி$_3$சி தி$_3$சி த்$_3$ராகு$_3$ஷ்ண ரச்மிஸ் ஸ்வரச்மீந்
உடு$_3$ததி ரபயாதா ஸுந்த$_3$ர ஸ்வாமிவர்ய |
சடரிபு முநிவர்யஸ் ஸங்க$_3$தோ பூ$_4$த் ஸசிஷ்ய:
ஸபதி$_3$ ஜஹிஹி நித்$_3$ராம் ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

7 நவ ஸரஸிஜ மாலாம் விஷ்ணு சித்தோ முநீந்த்$_3$ர:
ப்ரபு$_4$வர மது$_4$ராயா: பாத$_3$யோரர்ப்பிதும் தே |
ஸ்துதி ததி முக$_2$ரஸ்ஸந் ஸங்க$_3$தஸ் ஸந்நிகர்ஷே
த்யஜ சயந ருசிம் பே$_4$ா: ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

8 வசஸி மநஸி ச ஸ்வாம் ப$_4$க்தி முத்$_3$வேலயந்தீ
கசத்$_4$ருத ஸுமவச்யம் த்வாம் சிகீர் ஷுர் ஹி கே$_3$ா த$_3$ா |
ஸரப$_4$ஸமுபயாதா ஸுந்த$_3$ர ஸ்வாமி வர்ய
ப்ரகடய கருணும் ஸ்வாம் அஸ்து தே ஸுப்ரப$_4$ாதம் ||

9 வத$_3$ந கமல சோப$_4$ாம் தாவகீநாம் தி$_3$த்$_3$ருக்ஷு:
முநிவர ஸமுத$_3$ாயஸ் ஸங்க$_3$தஸ் ஸந் ஸமேத்ய |
மது$_4$ர மது$_4$ர க$_3$ாநாத் யாத$_3$த$_4$ாதி ப்ரபே$_4$ா போ$_4$
விஜஹி சயநமீச ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

10 சுப$_4$த$_3$ஸுக$_2$த$_3$நாத$_2$! ஸ்ரீபதே ரம்ய ப$_3$ாஹோ!
நலிந நயந பாணே சித்த த்$_3$ருங் மோஹ நாங்க$_3$ |
கவிவர பரகாலாபி$_4$க்ய ஸூரிஸ் ஸமாக$_3$ாத்
ஜஹிஹி சயந முத்$_3$ராம் ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

11 பரம புருஷ பூர்வாசார்ய வர்யோபகீ$_3$த
ஸ்துதி சத முக$_2$ராஸ்யஸ் ஸௌம்ய ஜாமாத்ரு யோகீ$_3$ |
யதி பரிப்$_3$ருட$_4$ கூரேசாதி$_3$பி$_4$ஸ் ஸூரிவர்யை:
ஸ ஹ ஸமுபக$_3$தோ பூ$_4$த் ஸ்யாத$_3$ஹோ ஸுப்ரப$_4$ாதம் ||

12 அஸ்டாங்க$_3$ ஸம்ஜ்ஞ விமாந நிவாஸ ஹ்ருஷ்ட
ஸ்ரீஸுந்த$_3$ர ப்ரபு$_4$வர ப்ரதி$_2$த ப்ரப$_4$ாவ |
யுஷ்மத் பரத்வமுபபாத்ய க்$_3$ருஹீத சுல்க:
ஸ்ரீப$_4$ட்டநாத இஹ க$_3$ாயதி ஸுப்ரப$_4$ாதம் ||

இத்தம் மது$_4$ரா நாத$_2$ ஸ்ரீமத் ஸுந்த$_3$ர ஹரே: ப்ரப$_4$ாத நுதிம் |
மநஸா வசஸா ச ஸத$_3$ா த$_3$த$_4$தாம் ஹி ஸதாம் கரஸ்தி$_2$தம் ஸகலம் ||

## ஸ்ரீஸுந்தர ஸ்துதி :

1 மது4ரா நக3ரே கமலா த3யிதம் கருணு வருணுலய தி3வ்யத்3ருசம் |
சரணம் சரணர்த்தி2ஜநஸ்ய ஹரிம் ஹ்ருத3யே கலயே ஸுப4க2ம் ஸததம் ||

2 ஸததம் ஸ்வபத3ப்ரணதாம் ஜநதாம் அநுகம்பிதுமத்ர க்ருதா வஸத2 |
நநு ஸுந்த3ர பாஹி ஹரேத்ர ஸத3ா விஹரந் மம ஹர்ஷய ஹ்ருத் கமலம் ||

3 கமலா குச குட்4மல குங்குமப4ாச் சட2யா ஸ்புட2லக்ஷ்ய பரத்வ விபே4ா |
மது4ரா நக3ரே விஹரந் ஸுலப4ச்ரித கல்பகமே விதர ஸ்வசயம் ||

4 சயநீய வரேண்ய பணீந்த்3ரசய ப்ரிய ப4க்த ஜநார்ப்பித வஸ்துருசே |
ப4விநோ நிகிலாந் நிஜத்3ருக்3 விப4வாத் பரிபாலயதாத் ப்ரிய கே3ாபஸமம் ||

5 ப்ரியகே3ாபவதூ4பரிரம்ப4ணஜ ப்ரதி2தப்ரப3ல ப்ரமத3ாம்பு3நிதே4 |
ரமணீய கு3ண ஸ்ப்ருஹணீய தநோ மயிஸுந்த3ர வர்த4ய ப4க்தித4நம் ||

6 த4நிபி4ர் முநிபி4ர் யதிபி4 : கவிபி4ர் விபு3தை4ர் விநதை : ஸ்துத தி3வ்யகுண |
இஹ தி3வ்ய புரே விநதா நகிலாந் ஹ்ருதி3த4ாரய வாரய நோவிபத3ம் ||

7 பத3யோ : ப்ரணதாம் ஜநதாமகி2லாம் க்ருபயா பரயாநக4யாமிதயா |
பரிபாலயிதும் பரமேச ஸத3ா ப4க3வந் ஸ்தி2ர வாஸ மிஹைவ குரு ||

8 குருகாதி4ப யோகி3வர ஸ்துத பே4ா : ப்ரணதார்த்தி ஹ்ருதி3ப்ரதி2தாத்ம கு3ண |
ப்ரலயார்ணவ துல்ய ப4வார்ணவ க3ாந் ப்ரணதாநகி2லாந் பரிபாஹ்ய நிசம் ||

9 அநிசம் ப4ஜதாம் ஸ்வபத3ாம்பு3ஜயோ : பததாம் ஸ்துவதாஞ்ச ஸதாம் சரண |
மரணுவஸரேபி தவைவ பத3ஸ்மரணம் க4டதாம் மம பாப ஹர ||

10 ஹர வாஸவ கீ3ஷ்பதி பத்3ம ப4வாத்3யகி2லா மர ஸந்ததி ஸேவ்ய ஹரே |
வரயோகி3முகை2ரகிலைர் கு3ருபி4ஸ் ஸஹ நித்ய மிஹைவ ரமஸ்வ விபே4ா ||

11 விப4வோஜ்வல கங்கண பூ4ஷண போ4 : மநுஜைர் த4நுஜைர் அமரைச்ச ஸத3ா |
ஸ்துத தி3வ்ய கு3ணௌக4 ஸுரேச ஹரே சிரமத்ர வஸந் ப்ரணதாந வத3ாத் ||

12 மது4ரா நாத2 ப4க3வத்3 தி3வ்ய ஸ்துதி மிமாம் ஸத3ா |
முதாத்4யாயந்தி யே ப4க்தாஸ் தேஷாம் ஸ்யுஸ் ஸர்வ ஸம்பத3 : ||

## ஸ்ரீ ஸுந்தரராஜ ப்ரபத்தி

1 து$_3$ : க$_2$ார்ணவ ப்ரபதிதாந் அக$_3$தீநந்யாந்
அஸ்மாத்$_3$ரு சாந் அவிதுமத்ர ஹரே ப்ருதி$_2$வ்யாம் |
நித்யாபி$_4$வாஞ்சித நிவாஸ க்ருபாம்பு$_3$ராசே
வ்யூஹ ஸுந்த$_3$ர தவ பாத$_3$யுக$_3$ம் ப்ரபத்$_3$யே ||

2 த$_4$ந்யை ரநந்ய மதிபி$_4$ : பரப$_4$க்தி யுக்தை :
ப்ரேமார்த்$_3$ர ஹ்ருத்$_3$பி$_4$ ரநகை$_4$ச்ச ஸமஸ்த ப$_4$க்தை : |
யத்$_3$யத் ஸமர்ப்பிதமசேஷ மித$_3$ம் ஸ்வத்$_3$ருஷ்ட்யா
பு$_4$ஞ்ஜாந ஸுந்த$_3$ர தவைவ பத$_3$ம் ப்ரபத்$_3$யே ||

3 உத்புல்ல பங்கஜ தடாக நிப$_4$ஸ்வ கா$_3$த்ர
வ்யூஹ ஸுந்த$_3$ர ரமேச த$_3$யைக ஸிந்தோ$_4$ : |
ஆர்த்தார்த்தி ப்$_3$ருந்த$_3$ ஹரணைக பராயணம் தே
பாதா$_3$ப்$_3$ஜ யுக்$_3$ம மநிசம் சரணம் ப்ர்பத்$_3$யே ||

4 காருண்ய பூர்ண நயநாம்பு$_3$ஜ பத்$_3$ம பாணே
பர்யந்த பூ$_4$மிவர பூ$_4$ஷண பூ$_4$ஷணாட்$_4$ய |
ஸ்ரீ பூ$_4$மி நாத$_2$ ! ச்ரித கல்பக ! தீ$_3$ந ப$_3$ந்தோ$_4$ !
தா$_3$ஸஸ் த்வதீ$_3$ய சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

5 காஸார பூ$_4$த முக$_2$ஸூரி ஸது$_3$க்தி ப்$_3$ருந்த$_3$
ஸம்ஸ்தூய மாந விப$_4$வ ப்ரசுர ப்ரபா$_4$ட்$_3$ய |
ஹே ஸுந்தராஹ்வய ஹரே கருணாம்ருதா$_3$ப்$_3$தே$_4$
நித்யம் த்வதீ$_3$ய சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

6 ஏதஸ்வ நித்ய மநகா$_4$பி$_4$ரசேஷ தி$_3$வ்ய
ஸம்பத் ஸம்ருத்$_3$தி$_4$பி$_4$ரிதி ப்ரணதார்த்தி ஹந்து : |
ஸ்ரீ ஸுந்த$_3$ரஸ்ய புரதச் சுப$_4$வாக் ப்ரபஞ்சாந்
ஆம்ரேட$_3$யந் பத$_3$யுக$_3$ம் சரணம் ப்ரபத்$_3$யே ||

7 அத்யுஜ்வலாபி$_4$ரமிதாபி$_4$ரமேய சோபா$_4$
ஸம்வர்த்$_3$தி$_4$நீபிரபி$_4$ராம தமாபி$_4$ருச்சை : |
பூ$_4$ஷபி$_4$ருஜ்வல தநோ மது$_4$ராதி$_4$ நாத$_2$
நித்யம் தவைவ சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

8 ஏநாம்ஸி ஜந்ம நியுதைஸ் ஸமுபார்ஜிதாநி
பூ$_4$யாம்ஸி பூ$_4$ரிதர சோக விவர்த்த$_4$நாநி |
உந்மூலயேதி கலிதாஞ்ஜலி ராக$_3$தஸ்தே
ஸ்ரீ ஸுந்த$_3$ரேச சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

9 அத்யந்த ஹேய சரிதாநி நிஜாநி பூ$_4$யோ —
பூ$_4$ய : க்ருதாந்யநுவிசிந்த்ய விதூ$_3$யமாந : |
ஹே வ்யூஹ ஸுந்த$_3$ர மநோஹர சார்ங்க$_3$பாணே
நித்யம் தவைவ சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

10 சேஷேச வந்தி$_3$த பத$_3$ாப்$_3$ஜயுக$_3$ ப்ரபோ$_4$ பே$_4$ா :
சீலாதி$_3$ தி$_3$வ்ய கு$_3$ண பூ$_4$ஷண பூ$_4$மிநாத$_2$ |
தி$_3$வ்யாநநாப்$_3$ஜ மம நாத$_2$ ரத$_2$ாங்க$_3$ பாணே
த$_3$ாஸஸ் த்வதீ$_3$ய சரணௌ சரணம் ப்ரபத்$_3$யே ||

11 இத்$_2$தம் ஸுரேச நத ஸுந்த$_3$ர தே$_3$வ தே$_3$வ
பாத$_3$ ப்ரபத்தி மநக$_4$ாம் படதாம் ததக்$_3$ரே |
ஸோயம் ஸுஸுந்த$_3$ர ஹரி : கமலா நிவாஸ :
ஸர்வாஞ்ச ஸம்பத$_3$முபர்யுபரி ப்ரத$_3$த்$_4$யாத் ||

## ஸ்ரீ ஸுந்தரராஜ மங்களம்

1 முமுக்ஷுபி4 ருபாஸ்யாய முக்த நித்யாநுகம்பிநே |
பக்4த வர்க்க3ாநுரக்தாய ஸுந்த3ராயாஸ்து மங்க3ளம் ||

2 இத3மித்த2ம் த்வஸங்க்2யாநாநர்ஹ மாஹாத்ம்ய ஸிந்த4வே |
இந்திரா பதயே நித்யம் ஸுந்த3ராயாஸ்து மங்களம் ||

3 பிநாகி வாஸவாதி3த்யாத்4யசேஷாமர ஸந்ததீ : |
புநதே ஸ்வத்3ருசா நித்யம் ஸுந்த3ராயாஸ்து மங்களம் ||

4 சூர வீராக்3ர க3ண்யாய சோப4நாக்ருதயே ஸதா3 |
ஸிந்து4ஜா பதயே நித்யம் ஸுந்த3ராயாஸ்து மங்க3ளம் ||

5 வநமாலா லஸத்3 வக்ஷஸ்தலாய விமலாய தே |
வநஜாக்ஷாய தே3வாய ஸுந்த3ராயாஸ்து மங்க3ளம் ||

6 விசால விமலச்லக்ஷ்ண பந்நகா3தீ4ச சாயிநே |
விதீ4சாநாதி3 ஸேவ்யாய ஸுந்த3ராயாஸ்து மங்க3ளம் ||

7 தேஜஸ்வி ஹேதி ராஜாட்3ய பாணயே மஹிதௌஜஸே |
ஸ்ரீ வ்யூஹ ஸுந்த3ராயாஸ்து ராஜ ராஜாய மங்களம் ||

8 பு3த4 வாக்பதி சுக்ரார்க்க சநைச்சர முகை2ர் க்3ரஹை : |
வ்யூஹஸுந்த3ரராஜாய ஸேவிதாயாஸ்து மங்க3ளம் ||

9 புருஷாய புராணாய புண்ட3ரீகத்3ருசே முதா3 |
ஸ்மயமாந ஆநநாப்3ஜாய ஸுந்த3ராயாஸ்து மங்க3ளம் ||

10 வராய வாஸுதே3வாய வாரித3ச்யாம மூர்த்தயே |
ஸர்வாங்க3 ஸுந்த3ராயாஸ்து நித்ய ஸ்ரீர் நித்ய மங்க3ளம் ||

11 க்ருதமாலா நதீ3தீரே பாவநே கத3ளீவநே |
விஹரந் ஸுந்த3ர ச்ரீமந் விஜயீப4வ ஸந்ததம் ||

★

ஸ்ரீ:

# அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் வரலாறு

— பேராசிரியர் **இரா. அரங்கராஜன்,** M. A., B. T. —
(மதுரைக் கல்லூரி, மதுரை-11.)

**முன்னுரை**

சங்கத் தமிழ் வளர்த்த மாநகராம் மதுரை தமிழோடு திருமால்நெறியினையும் போற்றி வந்த பெருமையுடையது. பாண்டிய மன்னர் பலர் திருமால் அன்பர்களாய்த் திகழ்ந்தனர்; திருமாலுக்குக் குன்றமன்ன கோயில்களையும் எழுப்பினர். அக்கோயில்களில் தலையாயது கூடல் அழகர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாகும். அதன் தொன்மை மேன்மைகளை இக்கட்டுரையில் காண்போம்.

**கிருதமாலா நதி**

மதுரை நகரை அணிசெய்வது வைகைப் பேராறு என்று தான் அறிந்திருக்கிறார்கள். ஆனால் புராணங்கள் மற்றும் சங்க நூல்கள் மூலம் வைகையாறு இரு பிரிவாகப் பிரிந்து மதுரை நகருக்கு மாலையிட்டது போல் பாய்ந்து சென்றது என்று தெளிவாகத் தெரிகிறது. அவற்றில் ஒரு பிரிவான **கிருதமாலை** கூடலழகரின் திருக்கோயிலுக்கு மிக சமீபத்தில் ஓடியது. கிருதமாலையின் இரு கரையிலும் வாழை மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அதனைக் **கதலீவனம்** என்று அழைத்தனர். அக் கதலீவனத்தினிடையில் தான் கூடலழகர் திருக்கோயில் வானோங்கி வளர்ந்து நின்றது.

கிருதமாலை நதி சமீபகாலம் வரை நீர்ப்பெருக்குடன் அகன்ற பரப்பளவில் ஓடிக்கொண்டிருந்தது.

கிருதமாலை நதியே வைகையினும் பழமையும் புனிதமும் பெற்று விளங்கியது. புண்ணிய நதிகளில் ஒன்று கிருதமாலை.

கிருதமாலை என்று பெயர் வந்ததற்குக் காரணத்தைக் கூடற் புராணம் கூறுகிறது.

**"வேகமாதலின் வேகவதி என்றும்**
**மாகம் வாய்ந்ததனால் வையை என்றும்தார்**
**ஆகலால் கிருதமாலையதாம் என்றும்**
**நாகர் முப்பெயர் நாட்டு நதியரோ"**

வேகமாகப் பாய்ந்து ஓடியதால் **வேகவதி** என்று அழைத்தனர். திருமால் பேருருவம் எடுத்துத் திரிவிக்கிரமனுக வளர்ந்து ஒரு திருவடியானது சத்தியலோகம் சென்ற போது நான்முகன் அத்திருவடியை விளக்கிய நீர் விண்ணிலிருந்து வீழ்ந்து வையகத்தைப் புனிதமாக்கியது. அக் காரணத்தால் அதனை **வையை** என்று அழைத்தனர். அதனுள் ஒரு பிரிவு கூடலழகருக்கு மாலை அணிவிக்கப் பெற்றது போல் சென்றதால் அதனைக் **கிருதமாலை** என்று அழைத்தனர். இக் கிருதமாலையினையே வையை என்றும் அழைத்ததாக அறிகிறோம்.

> "தார்முற்றியது போலத் தகைபூத்த வையைதன்
> நீர்முற்றி மதில் பொரூஉம் பகையல்லால் நேராதார்
> போர்முற்றொன்றறியாத புனல் சூழ்ந்த வயலூரன்"

என்ற கலித்தொகைப் பாடல் (மருதக்கலி. 2) கிருதமாலையைக் குறிப்பிடுகிறது. 'தார்முற்றியது போல' என்ற அடைமொழித் தொடர் கிருதமாலை என்ற வடமொழியின் தமிழாக்கமே என்பது தெளிவு.

**சத்தியவிரதனும் மத்ஸ்யாவதாரமும்**

முன் ஒரு யுகத்தில் **சத்தியவிரதன்** என்ற பாண்டிய மன்னன் கூடலழகரின் திருவடிகளில் பக்தி பூண்டிருந்தான். அவன் கூடலழகரைத் தியானம் செய்து கொண்டும் திருவாராதன தீர்த்தத்தையே பருகிக் கொண்டும் கிருதமாலையின் கரையிலேயே தவம் செய்தான். ஒரு நாள் அந்நதியில் ஜலதர்ப்பணம் செய்கையில் அவனுடைய அஞ்ஜலி ஜலத்தில் திருமால் மீனுருவாகத் தோன்றினுன். மத்ஸ்யாவதாரம் எடுத்த நாராயணன் பாண்டிய மன்னனுக்கு அருமறைப் பொருள்களை உபதேசித்தான். இவ்வரலாறு ஸ்ரீமத் பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஸ்ரீமத்பாகவதம் பகவான் வியாசரால் இயற்றப்பட்டது என்பதை நினைவிற் கொள்ளத்தகும்.

> "ஏகதா க்ருதமாலாயாம் குர்வதோ ஜல தர்ப்பணம் |
> தஸ்யாஞ்ஜல்யுதகே காசித் சபர்யேகாப்யபத்யத ||
> ஸத்யவ்ரதோऽஞ்ஜலிகதாம் ஸஹ தோயேந பாரத |
> உத்ஸஸர்ஜ நதீதோயே சபரீம் த்ரவிடேச்வர: ||

(ஸ்ரீமத் பாகவதம் 8-24-12, 13)

எனவே எம்பெருமான் மத்ஸ்யாவதாரம் எடுத்த புராணப் பெருமை வாய்ந்த நதியின் கரையில் கூடல் மாநகர் விளங்குவதை அறியலாம். பாண்டிய மன்னர்களும் திருமாலிடத்துக் கொண்ட பக்திப் பெருக்கால் மீன் உருவத்தைத் தம் கொடியிற் பொறித்துக் கொண்டு போற்றினர். பாண்டியர்களுக்கு இலச்சினையும் இரட்டை மீன்களே. கிருதமாலைக்கு மற்றொரு பெருமையும் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. கிருதமாலை நதி பாயும் பிரதேசத்தில் விஷ்ணு பக்தர்களான

பெரியோர்கள் அவதரிக்கப் போகிறுர்கள் என்று பாகவதம் தீர்க்க திருஷ்டியாகக் கூறியிருக்கிறது.

''கலௌ கலு ப$_4$விஷ்யந்தி நாராயண பராயணு: |
க்வசித் க்வசித் மஹாபா$_4$கா:த்$_3$ரமிடே$_3$ஷு ச பூ$_4$ரிச: ||
தாம்ரபர்ணீ நதீ$_3$யத்ர க்ருதமாலா பயஸ்விநீ |
காவேரீ ச மஹாப$_4$கா$_3$ ப்ரதீசீ ஸரஸ்வதீ ||

(ஸ்ரீமத் பாகவதம் I -5-38, 39)

(கலிகாலத்தில் தமிழ்நாட்டில் அதிலும் பெரும்பாலும் தாம்ரபர்ணீ, கிருதமாலே, பாலாறு, பெரும் புகழ்பெற்ற காவேரீ, மேற்கு நோக்கிப் பாயும் ப்ரதீசி, ஸரஸ்வதீ ஆகிய நதிக் கரைகளில் ஆங்காங்கு நாராயணனேயே இலக்காகவும் எய்துவிக்கும் நெறியாகவும் கொண்ட மஹாத்மாக்கள் தோன்றுவார்கள்) கிருதமாலே நதி தீரத்தில் எழுந்தருளியிருக்கும் கூடலழகரின் திருவடிக்கண் மாருத அன்பைப் பெற்றவராக **விஷ்ணு சித்தரான பெரியாழ்வார்** விளங்கப் போவதை பாகவதம் குறிப்பாலுணர்த்துவதாகக் கொள்ளலாம்.

**கிருதயுகத்தில் கூடலழகர் :**

நான்முகக் கடவுளான ப்ரஹ்மாவின் மானஸ புத்திரரான **சனத்குமாரர்** ஸ்ரீமந் நாராயணனேத் திருக்கோயிலமைத்து அர்ச்சா ரூபியாகத் திருப்பிரதிஷ்டை செய்து வழிபடப் பெரிதும் விரும்பினுர். அவருடைய விருப்பத்திற்கிணங்கத் தேவ சிற்பியான **விசுவகர்மா** பாண்டிய தேசத்தில் கிருதமாலா தீரத்தில் கதலீவனத்தின் நடுவில் நெடிதோங்கிநிற்குமாறு அஷ்டாங்க விமானத்தை நிர்மாணம் செய்துதந்தான். அவ்விமானத்துள் ஸகல பரிவாரங்களுடனும் ஸ்ரீமந் நாராயணனும் பிராட்டிமாருடன் எழுந்தருளி வீற்றிருந்தான். இக்கிருதயுகத்தில் தான் நீலகண்டனுன சிவபெருமான் அஷ்டாங்க விமானத்தின் ஈசான்ய திசையில் ஒரு பொற்ருமரைக் குளத்தினருகே உமாதேவியாரைக் கூடுவதற்காகக் கடுந்தவம் செய்தான். அவருடைய தவத்தைப் பாராட்டிக் கூடலழகரும் சிவபிரானுக்குச் சேவையருளினுர்; ஸப்தரிஷிகளே ஏவி **உமாதேவியாரை** சிவபிரான் திருமணம் செய்து கொள்ளத் துணையிருந்தார். பார்வதி கல்யாணத்தை நடத்திய பெருமை கூடலழகரையே சேரும்!

**திரேதாயுகத்தில் கூடலழகர் :**

பிருதுச் சக்ரவர்த்தி என்ற மன்னவன் ஒருவன் தனது தவ வலிமையால் தெய்விக விமானம் ஒன்றிலேறி எல்லாத் தலங்களுக்கும் சென்று வழிபட்டு வந்தான். ஒரு சமயம் அவனது விமானத்தின் நிழல் அஷ்டாங்க விமானத்தின் மீது விழுந்தது. உடனே விமானம் மேலே பறக்க இயலாமல் தரையில் இறங்கி விட்டது. அதிர்ச்சியடைந்த பிருதுச் சக்ரவர்த்தி அஷ்டாங்க விமானத்தைக்கண்டு அதனே வலம் வந்து வழிபட்டான். அஷ்டாங்க விமானத்தில் கோயில் கொண்

டிருந்த கூடலழகனுன சுந்தரராஜனைத் திருவடிதொழுது பலவருடங்கள் கூடலில் வாழ்ந்து அழகருக்குத் திருப்பணிகள் செய்து அதன் பலனுகப் பரமபதமான வைகுந்தமா நகர் சென்றடைந்தான்.

**துவாபரயுகத்தில் கூடலழகர்:**

அம்பரீஷன் என்ற மஹாபக்தன் ராஜரிஷியாகத் திகழ்ந்தான். மஹா விஷ்ணு பக்தனுன அவனுடைய பெருமை அளக்கவொண்ணுதது. அவன் பகவான் கோயில்கொண்ட க்ஷேத்திரங்களுக்குச் செல்லுவதில் கால்களையும் பகவானுடைய பாதங்களில் வந்தனம் செய்வதில் தலையையும் பயன்படுத்தி பரம வைராக்கியசாலியாகத் திகழ்ந்தான். விஷ்ணு பக்தியால் துர்வாஸரையும் வென்ற பெருமை படைத்திருந்தான். அவ்வம்பரீஷ மன்னன் தீர்த்த யாத்திரை செய்து கிருதமாலா நதியை அடைந்து அஷ்டாங்க விமானத்தில் எழுந்தருளிய கூடலழகரை ஆராதித்துப் பரமபதமான வைகுந்த மாநகரைச் சென்றடைந்தான்.

**கலியுகத்தில் கூடலழகர்:**

கலியுகத் தொடக்கத்தில் **புரூரவஸ்** என்ற பேரரசன் கூடலழகருக்குத் தொண்டு செய்து வீடுபேறு அடைந்தான். அவன் மகனுன இந்திரத்துய்ம்னனும் திருமால்நெறி தழுவிக் கூடலழகருக்கு அன்பனுய் நெடுங்காலம் அரசு புரிந்து வீடு பேற்றை அடைந்தான். இந்திரத்துய்ம்னனின் மைந்தனே **மலயத்துவஜ பாண்டியன்.** இவன் வடக்கே சென்று பகையரசர்களை வென்றபோது இமயமலை குறுக்கிட அதன் கொடுமுடிமீது மீன் இலச்சினையைப் பொறித்துத் திரும்பினுன். இவனையே பாண்டியர் குலபதி என்று பெரியாழ்வார் கொண்டாடுகிருர். மேலும் இமயத்தின் மீது இலச்சினை பொறித்த வீரத்தையும் பெரியாழ்வார் போற்றுகிருர். பெரியாழ்வாரால் போற்றப்படவேண்டுமானுல் அம்மன்னவன் பரமவைஷ்ணவனுகவே வாழ்ந்திருக்கவேண்டும்.

> "பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதிபோல்
> திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேற் பொறித்தாய்"

என்று எம்பெருமான் தன்னை ஆட்கொண்டு சென்னி மீது திருப்பொலிந்த சேவடியைப் பொறித்ததற்குப் பாண்டியன் பருப்பதத்தின் மீது கயல் பொறித்த செய்தியை உவமையாகக் காட்டுகிருர் பெரியாழ்வார். இப்பாசுர வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் மலயத்வஜ பாண்டியனைப்பற்றிக் கூறியவை அறியத்தக்கன.

"பாண்ட்ய வம்சத்துக்கு நிர்வாஹகனுயிருப்பானெருராஜா தானிருந்த தேசத்தில் நின்றும் மஹா மேருவளவும் வழியிலுள்ள காடுசீய்த்து வன்னிய மறுத்துத் தனக்கும் தன் பரிகரத்துக்கும் போகலாம்படி பெருவழியாக்கிக்கொண்டு சென்று, மஹாமேருவிலே தன் வெற்றியெல்லாம் தோற்றும்படி தன்னடையாளத்தையுமிட்டுப் போந்தான்.

* புரூரவஸ்ஸ¬தச்ச்ரீமாந் இந்த்$_3$ரத்$_3$யும்நோ மஹாப$_3$ல : |
தஸ்ய புத்ரோ மஹா பா$_4$கோ$_3$ மலயாசல கேதுமாந் ||
* ஸவிஜித்ய ந்ருபாந் ஸர்வாந் மேரோர் த$_3$க்ஷிணபார்ச்வதாந் |
மேரௌஸ்வநாம சிஹ்நௌச லிகித்வா ந்ருபஸத்தம : ||

என்னக்கடவதிறே.”

இம்மலயத்வஜ பாண்டியன் திருமாலிருஞ்சோலை அழகரிடத்தும் பக்தி பூண்டு கைங்கரியங்களைச் செய்தான். அதனையும் பெரியாழ்வார் தமது திருமொழியில் குறிப்பிடுகிறார்.

* மன்னர்மறுக மைத்துனன்மார்க் கொருதேரின்மேல்
முன்னங்குநின்று மோழை எழுவித்தவன் மலை
கொல்நவில் கூர்வேல் கோனெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே. (4-2-7)

பரமவைஷ்ணவனான மலயத்வஜ பாண்டியனின் வரலாற்றை இப்பாசுரவியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் குறிப்பிடுவதும் ஆராய்ச்சியாளருக்குப் பெரிதும் பயன்படும். ‘பொய்யிலாத மணவாள மாமுனி’ என்று நம் முன்னோர் பாராட்டியதை மதித்து அவர்தம் உரையைக் கற்கவேண்டும். அவருரை விளக்கம் வருமாறு :

“ *மலயத்வஜ இதி க்யாதோ மாநவேந்த்ரோ மஹீபதி : *என்கிற மலயத்வஜ சக்ரவர்த்தி இத்தேசத்தை உபலாளித்துக் கொண்டு போந்தான் என்னும் ப்ரீதியாலே அவனை ச்லாகிக்கிறார் மேல். கொலைக்குப் பரிகரம் என்னும்படியான கூரியவேலையுடையவனாய், ராஜநீதி குலையாமல் தர்ம யுத்தமே செய்யுமவனாய், தப: பலத்தாலே நித்யம் கங்கா ஸ்நாநம் செய்துபோரவல்ல பெருமையுடையவனாய், பாண்டிய ராஜ்யத்துக்கு ராஜாவாய், கட்டளைப் பட்டு நான் மாடக் கூடல் என்னும் பேரையுடையதாயிருக்கும் மதுரைக்குநிர்வாஹகனாய், தக்ஷிண திக்குக்கு ப்ரதாநனான மலயத்வஜ சக்கரவர்த்தியாலே கொண்டாடப்பட்ட தேசமாய்த்து. அதாவது—அகஸ்த்யன் வர்த்திக்கிற மலய பர்வதத்திலே சென்று அகஸ்த்ய மஹர்ஷி முன்னே ‘ தர்மமே நடத்தக்கடவேன்’ என்று மலயபர்வதத்தை எழுதிக் கொடியெடுத்தவன், கங்கையிலே ஸ்நாநம் செய்யப் போகாநிற்கச் செய்தே மதிதவழ் குடுமியளவிலே சென்றவாறே, தேர் வடக்கு ஓடாமல் நின்றதாய் அவ்விடத்திலே தேரை நிறுத்தி, இங்கே தீர்த்த விசேஷமும் தேவதாஸந்நிதியும் உண்டாகவடுக்கும் என்று இறங்கி ஆராய்ந்து பார்த்தவளவிலே, அவ்விடத்திலே அழகர் ஸந்நிதி பண்ணி, ‘இவ்வாற்றிலே ஸ்நாநம் செய்’ என்ன, நாமம் கேட்டு ஸ்நாநம் பண்ண வேண்டுகையாலே ‘இதுக்குப் பேர்என்’ என்று கேட்க, ‘முன்பே நம்மை ப்ரஹ்மா காலைக் கழுவுகிற காலத்திலே நம் சிலம்பில் நீர் இதிலே தெறித்து சிலம்பாறு என்று இதுக்குப் பேராய்த்து’ என்ன, அங்கே ஸ்நாநம் செய்து, கங்கா ஸ்நாநம் தவிர்ந்து



T. V. S. சேர்மன் ஸ்ரீ T. S. ராஜம் திருக்கோயிலுக்கு எழுந்தருளுகிருர் !

இங்கே ப்ரவணனுயிருந்து, 'அழகருக்கு வேண்டு மடிமைகளெல்லாம் செய்தான்' என்று ஒரு ப்ரஸித்தியுண்டிறே; அத்தையருளிச் செய்தாராய்த்து.' இவ்வளவு விரிவான விளக்கத்தை ஏன் மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார் என்று பார்க்க வேண்டும். மலயத்வஜ பாண்டியன் பரமவைஷ்ணவசிகாமணி என்பதையும் அதனுலேயே அவனைப் பெரியாழ்வார் பாடினுர் என்பதையும் நாம் உணருவதற்காகவே அவ்விரிவான விளக்கம் எழுந்தது. திருமாலிருஞ்சோலை அழகருக்கு அடிமைபூண்ட அம்மன்னர்மன்னன் தனது தலைநகரான கூடலில் கோயில் கொண்ட மூர்த்தியான கூடலழகரின் திருவடிகளிலும் பிரியாது ஆட்செய்து வாழ்ந்தான் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இம்மன்னவன் குலச்செல்வியான தடாதகைப்பிராட்டியாரைச் சோம சுந்தரக் கடவுள் திருமணம் செய்து கொள்ளப் பெரிதும் உறுதுணையாக இருந்தவரும் கூடலழகரே.

**சங்க காலத்தில் கூடலழகர் :**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெஞ்செழியன் கூடலழகருக்குப் பல திருவிழாக்களை எடுத்து மகிழ்ந்தான். ஆவணித் திருவோணத்தில் கூடலழகருக்குச் சிறப்பான வழிபாடுகள் செய்தான். அதனை "மாயோன் மேய ஓண நன்னுள்" என்று பாராட்டுகிருர் மாங்குடி மருதனுர் தாம் இயற்றிய **மதுரைக் காஞ்சி** என்ற பாடலில். கூடலழகரே **துவரைக் கோமான்** என்ற பெயரில் சங்கப் புலவராக வீற்றிருந்தார் எனக் கருத இடமுண்டு. கூடல் என்பது தமிழ்ச் சங்கத்தில் புலவரின் கூடலைக் குறிக்கும். அச் சான்ருேர் கூடலில் புலமை அழகுடன் வீற்றிருந்ததால் கூடல் அழகர் என்று அழைக்கப்பட்டார். இத் தொடரையே வடமொழியில் வ்யூஹ சுந்தரராஜன் என்று மொழி பெயர்த்துக் கொண்டார்கள்.

தொல்காப்பியச் செய்யுளியலில் 'கொச்சகம் அராகம்' என்ற சூத்திர வுரையில் பேராசிரியர் ஒரு **பரிபாடல்** செய்யுளை உதாரணமாகக்காட்டுகிருர். அப்பரிபாடல் கூடலழகரைப் போற்றுகிறது.

> "வானுர் எழிலி மழைவளம் நந்தத்
> தேனுர் சிமய மலையின் இழிதந்து
> நான்மாடக் கூடல் எதிர்கொள்ள, ஆனு
> மருந்தாகும் தீநீர் மலிதுறைமேய
> இருந்தையூர் அமர்ந்த செல்வ! நின்
> திருந்தடி தலையுறப் பரவுதும் தொழுதே"

ஏன்ற அடிகளிலே கூடலழகரை **இருந்தையூர் அமர்ந்த செல்வன்** என்று போற்றியிருக்கிறது. இருந்தையூர் என்பது இருந்தவூர் என்பதன் மருவிய

வழக்குச் சொல்லாகும். திருமாலாகிய கூடலழகர் இருந்த கோலத்துடன் எழுந்தருளியிருப்பதால் கூடலழகர் திருக்கோயில் அமைந்த பகுதியை இருந்தையூர் என்று சங்க காலத்தவர் வழங்கினர். கூடலழகருக்கும் 'இருந்தவளமுடையார்' என்ற திருநாமம் சங்க காலத்தில் மிகவும் பிரபலமாகியிருந்தது. சிலப்பதிகார அரும்பதவுரைகாரரே 'ஸ்ரீ இருந்தவளமுடையார்' என்ற திருப்பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார்.

சிலப்பதிகாரக் கதையில், மாதரி என்னும் இடைக்குல மடந்தை ஆய்ச்சியர் குரவை முடிந்ததும் வையைக் கரையிலுள்ள நெடுமாலைப் பூசிப்பதற்குச் சென்றாள்.

"ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடியேத்தத்
தூவித் துறைபடியப் போயினாள்"

(சிலம்பு. துன்பமாலை)

இங்கு 'நீடுநீர் வையை நெடுமால்' என்பதற்கு அரும்பதவுரைகாரர் 'ஸ்ரீ இருந்த வளமுடையார்' என்று விளக்கம் எழுதினார். மற்றொருவுரைகாரரான அடியார்க்கு நல்லார் 'அந்தரவானத்தெம்பெருமான்' என்று விளக்கினார். இன்றும் கூடலழகர் திருக்கோயில் அஷ்டாங்க விமானத்தின் அந்தரவானத்தில் சயன திருக்கோலத்தில் க்ஷீராப்திநாதன் (திருப்பாற் கடல் நாதன்) எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

கூடலழகர் கோயில்கொண்டிருக்கும் இருந்தையூர்ப் பகுதியில் சங்கத்துச் சான்றோர் பலர் வாழ்ந்தனர். இருந்தையூர்க் கருங்கோழிமோசி என்ற தமிழ்ப் புலவர் ஒருவரை இறையனார் களவியலுரையில் நக்கீரர் குறிப்பிட்டிருக்கிறார்.

**பெரியாழ்வாரும் கூடலழகரும் :**

ஸ்ரீ வல்லப தேவன் என்ற பாண்டியன் ஒருவன் வீடுபேற்றைத்தரவல்ல பரம்பொருளை அறிய விரும்பினான். அவனுக்குப் புரோஹிதராக இருந்தவர் **செல்வ நம்பி** என்ற பெரியார். அவருடைய கனவில் கூடலழகர் காட்சியளித்து ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து பெரியாழ்வாரை அழைத்து வித்வான்கள் கூடிய பெரும் சபையில் எழுந்தருளச் செய்தால் பரதத்துவத்தை அவர் எளிதில் அறுதியிடுவார் என்று கூறி மறைந்தார். பெரியாழ்வாரும் செல்வ நம்பியால் அழைக்கப்பட்டார். ஆழ்வார் வித்வத்ஸதஸ்ஸில் எழுந்தருளக் கூசினார். எம்பெருமான் ஆழ்வாருக்குக் கனவில் ஆணையிட, ஆழ்வாரும் மதுரை மாநகர் எழுந்தருளினார்.

பாண்டியன் பேரோலக்கத்திலே பலசமயவாதியரும் கூடியிருந்தனர். ஆழ்வாரும் பெருமிடுக்குடன் சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்களிலிருந்து

பற்பல வாக்கியங்களைக் காட்டித் தம் சொல்வன்மையாலும் பிரமாண பலத்தாலும் திருமாலான நாராயணனே பரம்பொருள் என்று நிரூபித்தார். பாண்டியன் கொண்டாடினன்; புலவர்களோ சங்கநாதம் செய்து ஆழ்வாரின் வெற்றியைப் போற்றினர். அப்போது பரிசிலாகக் கட்டியிருந்த பொற்கிழியும் பொற்கம்பத்தி லிருந்து தாழ்ந்து பெரியாழ்வாரின் திருக்கரங்களைச் சேர்ந்தது. ஸ்ரீவல்லப தேவனை ஆழ்வார் திருத்திப்பணிகொண்டு தம் சிஷ்யனுக்கிக் கொண்டார். பாண்டியனும் ஆசாரியரான பெரியாழ்வாரைக் கொண்டாடக் கருதி ஆழ்வாரைப் பட்டத்து யானை மீது ஏற்றித் திருவீதிகளிலே நகர்வலம் வந்தான். தானே ஆழ்வாருக்குச் சாமரம் வீசினன். இதனைக் குருபரம்பராப்ரபாவம் பின்வருமாறு கூறுகிறது :

பூதமோர் ஐந்துமேத்தப் புரையறு மறங்களேத்த
வேதமோர் நான்குமேத்த விண்ணவர் குழாங்களேத்த
ஓதுமு வுலகுமேத்த ஓங்கிரு சுடருமேத்த
மூதறிவுடைய மன்னன் சேனைகள் முழுதுமேத்த

அந்தணர் குழாங்களேத்த அருமுனிக் கணங்களேத்தப்
பந்தணை விரல்சேர் செங்கைப் பாவையர் வீதிதோறுஞ்
சந்தனக் குழம்பு சுண்ணம் தாதவிழ் மலர்கள் சிந்தி
இந்திர விழாவதென்ன இறைத்தனர் மணியும் பொன்னும்.

இவ்வரிய காட்சியை நேரிற் கண்டுகளிக்க விரும்பிய கூடலழகர் பிராட்டிமாரான திருமகள் நிலமகளோடும் பெரிய திருவடியான கருடாழ்வான் மீது ஆரோகணித்து ஆழ்வாருக்குத் தன் சொல்லரிய திருமேனியழகினைக் காட்டினன். அவ்வடிவழகிலே துவக்குண்ட ஆழ்வார் பக்திபரவசரானுர். இக் கலி காலத்தில் இங்ஙனே பேரழகுடன் பலருங்காணத் தோன்றுவதே! என்று வயிறுபிடித்து எம்பெருமானின் அழகுக்குக் கண்ணெச்சில் பட்டு விடுமோ என்று அஞ்சி அவ்வடிவழகுக்குக் காப்பாக யானை மீது கிடந்த மணிகளையே தாளமாகக் கொண்டு திருப்பல்லாண்டு பாடினுர்.

ஸ்ரீவல்லபதேவன் ஆழ்வாரிடம் திருவிலச்சினை பெற்றுக் கூடலழகருக்கும் திருமாலிருஞ்சோலையழகருக்கும் திருப்பணிகள் செய்தான்.

ஸ்ரீவல்லபதேவனின் மகனுன நெடுஞ்சடையனும் தந்தையைப் போலவே வைஷ்ணவனுயிருந்தான். சீவரமங்கல சாசனத்தில்

'பராந்தகன் பரம வைஷ்ணவன் தானுகி
நின்றிலங்கு மணி நீண்முடி நிலமன்னவன்
நெடுஞ்சடையன்'

என்ற வரிகளே இதற்கு ஆதாரம். பெரியாழ்வார் பரதத்வ நிர்ணயம் செய்த சபை விளங்கிய இடத்தை 'மெய் காட்டும் பொட்டல்' என்று

அழைத்தனர். இன்று அது 'மேங்காட்டுப் பொட்டலாக' வழங்குகிறது. மார்கழி மாதத்தில் பகற்பத்து முதல் நாள் கூடலழகர் கருடவாகனத்தில் மெய்காட்டும் பொட்டலுக்கு எழுந்தருளுகிறார். அப்போது யானை வாகனத்தில் பெரியாழ்வாரும் அங்கே எழுந்தருள்கிறார். பெரியாழ்வார் பரதத்வ நிர்ணயம் செய்த பிரகாரங்களை எல்லாம் அப்போது 'வென்று கிழியறுத்தபட்டர்' பரம்பரையினர் புராணமாகப் படிக்கிறார்கள். திருப்பல்லாண்டு தொடக்கமும் அங்கேதான் இன்றும் நிகழ்கிறது. இந்தப் பரவஸ்து நிர்ணய விழா தொன்று தொட்டு இன்றுவரை இடையறாது நடந்து வருகிறது.

**திருமங்கையாழ்வாரும் கூடலழகரும் :**

திருமங்கையாழ்வார் திருநாகைப்பட்டினத்துக்கு எழுந்தருளி நாக அழகியாரான சௌந்தரராஜனை மங்களாசாசனம் செய்தார். அவருடைய வடிவழக்கு ஒருவமையிட விரும்பிய ஆழ்வார், 'கோழியாகிய உறையூரிலும் கூடலாகிய தென்மதுரையிலும் எழுந்தருளியிருக்கும் கோவலனாகிய எம்பெருமானைப் போன்ற பேரழகு படைத்தவர் திருநாகை அழகியார்' என்று அருளிச் செய்கிறார். உயர்ந்த வஸ்துவையே உவமைகாட்டுவது இலக்கணவிதி. ஆதலால் உவமானமாகக் காட்டப்படும் கூடல் அழகர் மிகப்பேரழகியார் என்று திருமங்கைமன்னனின் திருவுள்ளம்.

**❋ கோழியும் கூடலும் கோயில் கொண்ட**
**கோவலரே ஒப்பர் குன்றமன்ன**
**பாழியந் தோளும் ஓர் நான்குடையர்**
**பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்**
**வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்**
**மாகடல் போன்றுளர் கையில் வெய்ய**
**ஆழியொன் றேந்தி ஓர் சங்கு பற்றி**
**அச்சோ ஒருவர் அழகியவா.**

என்பது திருமங்கை மன்னனின் பாசுரம். இப்பாசுரத்தின் சொற்களையும் தொடர்களையும் பொருளமைதியையும் ஆழ்ந்து நோக்கினால் பெரியாழ்வாரின் 'திருப்பல்லாண்டு' திருமங்கை மன்னனின் திருவுள்ளத்தில் உறைந்து கிடப்பதைக் காணலாம்.

**எம்பெருமானாரும் கூடலழகரும் :**

திருமாலிருஞ்சோலையழகருக்கு நூறு தடா நிறைய அக்கார அடிசிலும் வெண்ணெயும் சமர்ப்பித்து ஆண்டாளின் விருப்பத்தை நிறைவேற்றித் திரும்பி எழுந்தருளும் போது எம்பெருமானாராகிய ஸ்வாமி ராமாநுஜர் மதுரை மாநகருக்கு எழுந்தருளிக் கூடலழகரை மங்களாசாசனம் செய்து திருமாலை திருப்பரிவட்டம் ஸ்ரீசடகோபன் முதலிய வரிசைகளைப் பெற்று 'திருப்பல்லாண்டு விளைந்த திவ்ய தேசம்' என்று மிகவும் கொண்டாடி மகிழ்ந்தார் என்று 'ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய ஸூரி சரிதை' என்ற நூலில் பிள்ளைலோகாரிய சீயர் குறிப்பிடுகிறார்.

திருமந்திரமான திருவெட்டெழுத்து விளைந்தது பதரிகாச்ரமத்தில். வதரியம் பதியில் நாராயணன் நரனுக்கு உபதேசித்தது **திருமந்திரம்.** அதே திருமந்திரத்தை வயலாலி மணவாளன் திருமங்கை மன்னனுக்கு உபதேசித்தான். **திருமந்திரார்த்தம்** விளைந்தது திருக்கோட்டியூரிலே. திருக்கோட்டியூர் நம்பிகள் திருமந்திரத்தின் சீரிய செம்பொருளை எம்பெருமானாருக்கு உபதேசித்தார். எம்பெருமானார் ஊரும் உலகும் வாழ ஏழ்பாரும் உய்ய திருமந்திரார்த்தத்தை ஆசையுடையோர்க்கெல்லாம் வாரி வழங்கினார். அத்திருமந்திரார்த்தத்தின் ஸாரமே ப்ரணவமாகிய ஓங்காரம். அந்த ஓங்காரத்தின் உட்பொருளையே பெரியாழ்வார், திருப்பல்லாண்டில் உபதேசித்தார்; அதாவது பிரணவார்த்தத்தை உபப்ரஹ்மணம் செய்தார். பிரணவம் அகார உகார மகாரங்களின் சேர்க்கையான ஓரெழுத்து ஒருமொழி. *ஓமித்யேகாக்ஷரம்* என்ற சுருதியைக் காண்க. அகாரமான பகவானுக்கே மகாரமான ஜீவாத்மா அடிமைப்பட்டது என்பது பிரணவத்தின் தேறிய பொருள். அகாரத்தில் பிராட்டி சம்பந்தம் வெளிப்படையாக அறியப்படவில்லை. பிராட்டியோடு கூடிய பிரானுக்கே நாம் அடிமை செய்வது என்றுணர்த்தவிரும்பியே பெரியாழ்வார் *திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்* என்று அருளிச் செய்தார். திருமாலே என்பது அகாரத்தின் அர்த்தம்; நானும் என்பது மகாரத்தின் அர்த்தம். உனக்குப் பழவடியேன் என்பது உகாரத்தின் அர்த்தம். இவ்வாறு பிரணவத்தின் விரிபொருளாக விளங்கும் **திருப்பல்லாண்டு** அவதரிக்கப் பெற்ற உத்தமோத்தம திவ்யதேசமான திருக்கூடல் பதரிகாச்ரமத்தினும் பன்மடங்கு பெருமைபொருந்தியது. அதனாலே தான் ஸ்ரீராமாநுஜர் கூடலழகர் திருக்கோயிலில் மனம் பொருந்தினார்.

**திருவாய்மொழிப் பிள்ளை** :

திருவாய்மொழிப் பிள்ளை என்ற ஆசாரியர் கி. பி. 1307ல் திருவவதரித்தார் மதுரைக்குக் கிழக்கேயுள்ள குந்தீநகரத்தில் (கொந்தகை) திருவவதரித்த இப்பெரியார் பாண்டிய தேசத்தின் முதலமைச்சராகப் பணியாற்றினார். இவருடைய காலத்தில் தமிழகத்தில் துருக்கர் படையெடுப்பு நடந்தது. அப்படையெடுப்புக்களில் அழியாது கூடலழகர் திருக்கோயிலைக் காத்த பெருமை இவரையே சேரும். இவர் அமைச்சர் பதவியை துறந்து பரம வைராக்ய நிதியாய்த் திகழ்ந்தார். இவருடைய சிஷ்யரே மணவாள மாமுனிகள். திருவாய்மொழிப் பிள்ளையின் சிஷ்ய பரம்பரையினரே இன்றும் இத்திருக்கோயிலில் முதல் தீர்த்த மரியாதை மற்றும் பல சிறப்புக்களையும் பெற்றுவருகின்றனர்.

**மணவாள மாமுனிகள்** :

மணவாள மாமுனிகள் இருமுறை மதுரைக்கு எழுந்தருளி மல்லாண்ட திண்டோளனை கூடலழகரை மங்களாசானம் செய்திருக்கிறார். இச்செய்தி பிள்ளை லோகாரிய சீயர் அருளிச் செய்த 'யதீந்திர ப்ரவண ப்ரபாவம்' என்னும் நூலிலிருந்து அறியப்படுகிறது. மணவாள மாமுனிகளுடைய திருவடிகளில் ஆசிரயித்து சிஷ்யனான மஹாபலிவாணாதிராயன் என்னும் அரசன் கூடலழகர் திருமாலிருந்

சோலையழகர் திருமோகூர்க் காளமேகப் பெருமாள் திருக்கோயில்களுக்குப் பல திருப்பணிகள் செய்தான்.

**நாயக்க மன்னர்கள் :**

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களும் அவ்வப்போது பல திருப்பணிகளைச் செய்து வந்தனர். துவஜஸ்தம்ப முன் மண்டபமும், ஹேமபுஷ்கரணி மண்டபமும் நாயக்கர் காலத் திருப்பணிகள். அஷ்டாங்க விமானத்தையும் அம் மன்னர்கள் புதுப்பித்திருக்கக்கூடும் எனத் தோற்றுகிறது. இத் திருக்கோயிலிலுள்ள மூன்று கல்வெட்டுகள் 1911ல் பிரதி செய்யப்பட்டுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 557, 558, 559, எண்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக் கல் வெட்டுக்களால், பெருமாளின் பெயர் கூடலழகிய பெருமாள் என்பதும் கோயில் நித்யப்படி நைவேத்யத்துக்கும் கட்டளைக்கும் பல கிராமங்கள் விடப்பட்டன என்பதும், நித்திய பூஜைக்கு அமுது படியும் பொற்காசுகளும் நாயக்க மன்னர்களால் வழங்கப்பட்டன என்பதும் வேறு பல செய்திகளும் தெரியவருகின்றன.

**அஷ்டாங்க விமானம் :**

கூடலழகர் திருக்கோயிலின் பெருமைக்குக் காரணமாக நிற்கிறது கம்பீர மான அஷ்டாங்க விமானம். பகவான் எழுந்தருளியிருக்கும் விமானங்கள் 96 வகைப்படும் என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவற்றுள் மிகவும் அருமை யானது அஷ்டாங்க விமானம். திருக்கோட்டியூரிலும் உத்தரமேரூரிலும் அஷ்டாங்க விமானங்களைக் காணலாம். எட்டு அங்கங்களையுடையதாய் மூன்று தளங்களை யுடையதாய் அமைந்திருப்பது அஷ்டாங்க விமானம். இது எட்டெழுத்துக்களை யுடையதாய் மூன்று பதங்களையுடையதான திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தின் ஸ்தூல வடிவமாகும்.

அடித்தளத்தில் எம்பெருமான் வீற்றிருந்த திருக்கோலத்தில் உபயநாச்சியார் களுடன் சேவை தருகிறுர். இவரையே **மல்லாண்ட திண்டோளன** என்று பெரி யாழ்வாரும் **கூடல் கோயில் கொண்ட கோவலர்** என்று திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்தனர். இக்கருவறையில் எழுந்தருளியிருக்கும் உத்ஸவர் **வ்யூஹ ஸுந்தரராஜன்** என்று அழைக்கப்படுகிறுர். மூலவராகிய அழகர் ஒரு திருக் கரத்தால் அடியார்களை அழைத்து மற்ருெரு திருக்கரத்தால் அபயமளிக்கும் திருக் கோலத்தில் காணபடுகிறுர். ஆதலால் **ஆஹூய வரதன** அல்லது அழைத்து அபய மளிக்கும் பெருமாள் என்றும் போற்றப்படுகிறுர். பஞ்சபேரர்களும் சக்கரத்தாழ்வாரும் இங்கு எழுந்தருளியிருக்கின்றனர்.

இரண்டாவது தளமாகிய முதல் மாடத்தில் பெருமாள் சூரியநாராயணருக நின்ற திருக்கோலத்தில் இரு தேவிமார்களுடன் காட்சி தருகிறுர். இவர் வர்ண கலாபத் திருமேனியுடன் எழுந்தருளியிருக்கிறுர். இவரைச் சுற்றிலும் கருவறையின் சுவர்களில் மிகவும் அற்புதமான வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

அவற்றைப் பழமை கெடாமல் போற்றிக் காக்கவேண்டும். அவற்றில் அஷ்டதிக் பாலர்களான அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இந்திரன் ஆகியோரின் வடிவங்கள் சிறப்பாகக் காணப்படுகின்றன. இவர்களுடைய வாஹனங்களான ஆடு, எருமை, நரன், மகரம், மான், குதிரை, ரிஷபம், யானை களின் ஓவியங்களும் அற்புதமாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

மூன்ருவது தளமாகிய இரண்டாவது மாடத்தில் பெருமாள் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் காணப்படுகிருர். இவரும் வண்ணத் திருமேனி உருவத்தை யுடையவர். இவரைச் சுற்றிலும் கருவறைச் சுவரில் தசாவதாரக் கோலங்கள் சுதை யால் அமைக்கப்பட்டுள்ளன. பிருகு மார்க்கண்டேயர்கள் தரை மீது அமர்ந்து காணப்படுகின்றனர்.

மூன்று தளங்களிலும் இரண்டிரண்டு சுற்றுப் பிரகாரங்கள் (திருவுண்ணு ழிகைகள்) அமைந்திருக்கின்றன. ஒரே ஊர்த்துவமுகமாக ஒன்றின் மீது ஒன்ருய் மூன்று சந்நிதிகள் (கர்ப்பகிருஹங்கள்) அமைந்து அவற்றில் எம்பெருமானின் மூன்று நிலைகளான வீற்றிருத்தல், நிற்றல், கிடத்தல் ஆகிய திருக்கோலங்களைச் சேவிக்கும் அமைப்பு மிகச் சிறப்பானது.

> "நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து
> அன்று வெஃகணைக் கிடந்தது என்னிலாத முன்னெலாம்" (திருச்சந் )

என்கிறபடியே தனித்தனியே ஊரகத்திலும் பாடகத்திலும் திருவெஃகாவிலும் சென்று நின்ற கோலத்தையும், இருந்த கோலத்தையும், கிடந்த கோலத்தையும் சேவிக்காமல் பக்தர்கள் கூடலழகர் திருக்கோயிலில் அம்மூன்று திருக்கோலங்களை யும் ஒரு சேரக் காணலாம்.

அஷ்டாங்க விமானத்தின் புறப்பகுதியும் மூன்று சுற்று வரிசைகளையுடைய தாய் ஒவ்வொரு சுற்றிலும் அற்புதமான சுதை உருவங்கள் அமையப் பெற்றதாய் விளங்குகிறது. விமானத்தின் சிகரத்தின் மீதுள்ள ஸ்தூபி கண்ணைக் கவரும் பொன்னிறத்தில் மின்னுகிறது. அதைச் சுற்றிலும் நான்கு சிறு ஸ்தூபிகள் அழகு டன் அமைந்திருக்கின்றன. விமானத்தின் கிரீவத்தில் கொடிகளுடன் கூடிய மாலைகள் அணி செய்கின்றன. விமானத்தின் பீடத்தில் நான்கு முனிவர்களும் அதையடுத்துக் கீழ்த் தட்டில் பக்கத்துக்கு நால்வராக பதினாறு முனிவர்களும் அமர்ந்திருக்கின்றனர். இவர்களில் சிலர் வீராசனத்தில் அமர்ந்திருக்கின்றனர். விமானத்தின் நான்கு மூலைகளிலும் சிங்கங்களுடன் கூடிய கருடபிம்பங்கள் அற்புத மான வேலைபாடுகளுடன் வியக்கத்தக்க ஆக்ருதிகளுடன் கூடி விளங்குகின்றன. விமானத்தின் கீழ்த் திசையில் ஸ்ரீபூவராஹஸ்வாமி எழுந்தருளியிருக்கிருர். தென் திசையில் ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்மன் எழுந்தருளியிருக்கிருர்; மேல்திசையில் ஸ்ரீலக்ஷ்மி நாராயணன் எழுந்தருளியிருக்கிருர்; வடதிசையில் ஸ்ரீமந் நாராயணன் எழுந்தருளி யிருக்கிருர். புறப்பகுதியான சுற்றில் எட்டுச் சிறு விமானங்களும் விமான தேவதை களும் அமைந்திருக்கின்றன.

முதல் அடுக்கில் ஸ்ரீராமாயண சரித்திரத்தைச் சித்தரிக்கும் சுதை வடிவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது அடுக்கில் ஸ்ரீபாகவத சரித்திரத்தைச் சித்தரிக்கும் சுதை வடிவங்களும், மூன்ருவதான மேல்அடுக்கில் சிவனுடைய ருத்ராகாரமான வடிவங்களும் திருமாலின் தசாவதாரக் கோலங்களும் துர்க்கையின் பல்வேறு வடிவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## இராமாவதாரச் சிற்பங்கள்

விசுவாமித்திரர் இராம இலக்குவர்களை வனம் அழைத்துச் செல்லல்
தாடகை வதம்
அஹல்யா சாப விமோசனம்
சீதா கல்யாணம்
அயோத்யைக்கு மீண்டும் வருதல்
சீதையுடன் வனம் புகுதல்
மாரீச வதம்
ஸீதாபஹரணம்
ஆஞ்சநேயரைச் சந்தித்தல்
ஸுக்ரீவ ஸக்யம்
வாலி ஸுக்ரீவ யுத்தம்
அசோகவனத்தில் ஸீதை
விபீஷண சரணுகதி
ஸஞ்சீவி பர்வதம் கொணருதல்
லக்ஷ்மண கும்பகர்ண யுத்தம்
லக்ஷ்மண இந்திரஜித் யுத்தம்
ராமராவண யுத்தமும் ராவண வதமும்
ராம பட்டாபிஷேகம்

## கிருஷ்ணுவதாரச் சிற்பங்கள்

கம்ஸன் ஆலோசனை
வசுதேவர் சிறையிலிருந்து தப்ப ஆலோசனை
பூதனை வதம்
தேனுகாசுர வதம்
உரலில் கட்டுண்டதும் இரட்டை மருத மரங்களை முறித்ததும்
சகடாசுர வதம்
கோபியருடன் தயிர் கடைதல்
வெண்ணெய் திருடுதல்
காளிங்கமர்த்தனம்
கோவர்த்தனம் குடை பிடித்தல்
கோபியர் வஸ்த்ராபஹரணம்
கம்ஸ வதம்
ருக்மிணி கல்யாணம்.



பெருஞ்செல்வர் பிர்லாவின் பெருங்கொடையைத் திருப்பணிக் குழுத்தலைவர் பெறுதல்

## பிற சிற்பங்கள்

(i) பிக்ஷாடனர், கால ஸம்ஹாரர், நடராஜர், ஆறுமுகன், அகோர வீரபத்ரர், அல்லி அர்ஜுன யுத்தம், வ்யாக்ரபாத சக்திவிநாயகர்.

(ii) திரிவிக்ரமன், விச்வரூபக் காட்சி, தசாவதாரம், சுகமுனிவர், ஹயக்ரீவர், கஜேந்திர மோக்ஷம், காமதேனு.

அஷ்டாங்க விமானத்தின் ஸ்தூபியின் நிழல் தரையில் வீழ்வதில்லை. விமானத்தின் கீழ்ப்பகுதியில் அடித்தளத்தின் சுற்றுச் சுவரிலுள்ள கோஷ்ட கும்ப பஞ்சரங்களில் விசித்திரமான கொடி வேலைப்பாடுகளும் அதிஷ்டானத்தின் மேலே யுள்ள பாதத்தில் நுண்ணிய சிற்பங்களுடன் கூடிய பலகணிகளும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருக்கின்றன.

இத்தகைய சிற்ப நுட்பம் வாய்ந்த அஷ்டாங்க விமானத்தைப் பலரும் கண்டு வியந்து பாராட்டுகின்றனர். அதிஷ்டானத்திலுள்ள கண்டத்தில் (Pilaster) அர்த்த சித்திரங்கள் அழகு செய்கின்றன.

### அஷ்டாங்க விமானத்தை வலம் வருவதால் விளையும் நன்மைகள்

அஷ்டாங்க விமானத்தின் பெருமைகளை வடமொழியிலுள்ள ப்ரஹ்மாண்ட புராணத்துள் வரும் க்ஷேத்ரமாஹாத்மிய காண்டம் பன்னிரண்டு அத்யாயங்களில் வருணிக்கிறது. தேவசிற்பியான விசுவகர்மாவின் சிருஷ்டியான இவ்வஷ்டாங்க விமானத்தில் எல்லா தேவர்களும் உறைகின்றனர். ஆதலால் இவ்விமானத்தைச் சுற்றி நாளும் வலம் வருவதால் எல்லா இஷ்ட சித்திகளும் ஏற்படுகின்றன.

இவ்வஷ்டாங்க விமானம் அஷ்டாக்ஷர மஹாமந்திரமான **'ஓம் நமோ நாராயணாய'** என்பதன் ஸ்தூல சரீரமாகக் கருதத் தக்கது. ஆதலால் அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தைச் சொல்லிய முழுப் பலனையும் இவ்விமானத்தை வலம் வருவதால் எளிதல் அடையலாம். அஷ்டாக்ஷர மஹா மந்திரம் தன்னைச் சொல்லுவாருக்குத் தரும் பலன்கள் இன்னஇன்னவை என்பதைத் திருமங்கையாழ்வார் ஒரு பாசுரத்தில் அருளியிருக்கிறார் :

* குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெரு நிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

பிள்ளை லோகாசாரியார் என்ற பெரியார் தாம் இயற்றிய முமுக்ஷுப்படியில் திரு மந்த்ரப்ரகரணத்தில் அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தைச் சொல்லுவதால் அது தரும் பலன்களைப் பின்வருமாறு அருளிச் செய்வதும் கருதத் தக்கது:

"இது தான் 'குலந்தரும்' என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும். ஐச்வர்ய பகவல்லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும். கர்ம ஜ்ஞான பக்திகளில் இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக் கட்டிக் கொடுக்கும். ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஜ்ஞானத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஹேதுவா யிருக்கும்." ஆக கர்ம ஜ்ஞான பக்தி மார்கங்களைப் பின் பற்றியவர்களும் ப்ரபத்தி யான சரணாகதி நிஷ்டையில் இருப்பவர்களும் அஷ்டாங்க விமானத்தை வலம் வருவதால் தம் தம் அபீஷ்டங்களை எளிதில் அடையலாம். இவ்விமானத்தை ஒரு மண்டலம் வலம் வருபவர்கள் கைமேல் பலனை அடைந்து வருகிறார்கள். இதை இன்றும் அனுபவமாகக் காணலாம்.

**திருக்கோயில் அமைப்பு**

திருக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்தது. ஐந்து நிலைகளைக் கொண்ட அழகிய ராஜகோபுரம் அமைந்திருக்கிறது. அதன் முன்னே இராப்பத்து மண்டபம் உள்ளது. கோயிலினுள் தாயாருக்கும் ஆண்டாளுக்கும் தனிச் சந்நிதிகள் உள்ளன. தாயார் சன்னிதியிலுள்ள இசைத் தூண்கள் சிற்பக்கலையின் சிகரமாய் அமைந்தவை. தாயார் திருநாமம் **மதுரவல்லி.** ஆண்டாள் ஸந்நிதியில் திருப்பாவைக் கல்வெட்டுக் களும் ஓவியங்களும் காணத் தக்கன. ஆழ்வார்கள் ஸந்நிதியில் ஆழ்வார்களுடன் நாதமுனிகள், ராமாநுஜர், கூரத்தாழ்வான், வேதாந்த தேசிகர் ஆகிய ஆசாரியர் களும் எழுந்தருளியிருக்கின்றனர். மணவாள மாமுனிகளுக்குத் தனிச் சந்நிதி

அமைக்கப்பட்டிருக்கிறது. இத்திருக்கோயிலில் தென்கலை ஸம்பிரதாயமும் வைகானஸ ஆகம வழிபாடும் அனுஷ்டிக்கப்படுகின்றன. வேறு விஷ்ணு ஆலயங்களில் காணப்படாத நவக்ரஹங்களின் சந்நிதி ஒன்றும் இத்திருக்கோயிலில் அமைந்திருக்கிறது; இது எழுபது ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. திருக்கோயிலினுள் ஹேம தீர்த்தம் என்ற திருக்குளம் ஒன்றும் இருக்கிறது. இத்திருக்கோயிலுள்ள இராம, லக்ஷ்மணர்களின் விக்ரஹங்கள் மிகப் பழமையானவை. பாண்டியர் காலத்து வார்க்கப்பட்டவை. இராமர் சந்நிதிக்கு எதிரே ஆஞ்சநேயர் ஸந்நிதியும் அருகே கிருஷ்ணன் ஸந்நிதியும் மற்றொருபுறம் சேனை முதலியார் ஸந்நிதியும் அமைந்திருக்கின்றன. கூடலழகர் ஸந்நிதிக்கு முன் பக்ஷிராஜனான கருடன் ஸந்நிதியும் அமைந்திருக்கிறது. பெரிய திருச்சுற்றில் மேற்கு மூலைகளில் சக்கரத்தாழ்வாரும் யோக நரஸிம்மரும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றனர். அழகிய மர வேலைப்பாடுகள் நிறைந்த வைகுண்ட ஏகாதசீ ஊஞ்சல் மண்டபமும் அதற்கு எதிரே வாஹன மண்டபமும் கருங்கல் திருப்பணியில் அமைந்து துவஜஸ்தம்ப மண்டபத்தின் அழகை மிகுவிக்கின்றன.

**முடிவுரை :**

அருள்மிகு கூடலழகரின் திருக்கோயிலின் வரலாற்றையும் அமைப்பினையும் ஒருவாறு சுருக்கமாகக் கண்டோம். விரிவாக வேண்டுவோர் கூடற் புராணத்தையும் பிரம்மாண்ட புராணத்தையும் படித்து அறியலாம். இவ்வருமையான திருக்கோயிலை—கலைப் பெட்டகத்தை—மகா கும்பாபிஷேகமான இன்று (4—4—1976) புதுமை மெருகுடன்—கலைப் பொலிவுடன் வருங்கால சந்ததியினருக்கு நாம் வழங்குகிறோம்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஸ்ரீமதுபயவேதாந்தாசார்ய திருநாங்கூர் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி
(நியாய வியாகரண சிரோமணி, தமிழ் வித்வான். ஸ்ரீராமாநுஜ மிஷன்
கௌரவபொதுச் செயலாளர். ஆசிரியர் கு. சி. பாடசாலை, ஸ்ரீரங்கம்.)

பொய்கையார் முதலான ஆழ்வார்கள் பன்னிருவர் பாடியருளிய பாடல் தொகுப்புக்கு **'நாலாயிர திவ்வியப் பிரபந்தம்'** என்று பெயர் வழங்கப்படுகிறது. ஆழ்வார்களைச் சிறப்பாக **'திவ்வியஸூரிகள்'** என அழைப்பது வழக்கம். ஆழ்வார்கள் பாடல் பெற்ற திருமாலின் திருப்பதிகளுக்குத் **திவ்விய தேசங்கள்** என்ற பெயர் பிரஸித்தமானது. ஆக, திவ்வியஸூரி, திவ்வியப் பிரபந்தம், திவ்விய தேசம் என எல்லாம் தெய்வீக அநுபவம் வாய்ந்ததாக அமைந்தது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம்.

இந்த ஸம்பிரதாயத்தில் பெரியபெருமாள், பெரியபிராட்டியார், ஸேனை முதலியார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, ஸ்ரீராமாநுஜர் எனக் குருபரம்பரை வருகிறது. இப்பரம்பரை, ஆசார்யன் சிஷ்யனுக்குத் திருமந்திரம், த்வயம், சரம சுலோகம் எனும் ரஹஸ்யத்ர யோபதேச மூலமாகவும், ரஹஸ்யத்ரயார்த்தப் பிரகாசமான க்ரந்தோபதேச மூலமாகவும் ஓராண் வழியாய் வருகிறது. நாதமுனிகள் நம்மாழ்வாரை யோகக்கண்ணால் கண்டு அவர் அருள் பெற்று அவரிடம் ரஹஸ்யத்ரயோபதேசமும், ரஹஸ்யத்ர யார்த்தத்தை விளங்கச் செய்வதான நாலாயிர திவ்வியப் பிரபந்தோபதேசமும், வேதாந்தார்த்த விசார ரூபமான ப்ரஹ்மஸூத்ரார்த்தோபதேசமும் பெற்றார். ஆகவே இந்த ஆசார்ய பரம்பரை ரஹஸ்யத்ரயோபதேச ரூபமான ஸமாச்ரயண பரம்பரையாகவும், க்ரந்தோபதேச பரம்பரையாகவும் வருகிறது.

இன்றைக்குச் சுமார் ஆயிரத்துநூறுண்டுகளுக்கு முன் (கி. பி. 825) நாதமுனிகள் இவ்வுலகில் வாழ்ந்து வந்தார். அவருக்கு முன் சுமார் நூறு அல்லது நூற்றைம்பதாண்டுகளுக்கு முன் ஆழ்வார்களுள் கடைசியாகத் தோன்றிய

திருமங்கைமன்னன் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் திருக்கார்த்திகைத் திருநாளன்று தான் பாடிய திருநெடுந்தாண்டகத்தை ஸ்ரீரங்கநாதன் திருமுன்பே இனிமையாகப் பாடி எம்பெருமானை ஆநந்திப்பிக்க எம்பெருமான் உகந்து திருமங்கைமன்னனுக்கு அவர் வேண்டிய வரனைக் கொடுத்தான். மார்கசீர்ஷ சுக்ல ஏகாதசி முதல் பத்து நாள் எம்பெருமான் வேதங்களைக் கேட்டருள்வது போல் நம்மாழ்வார் பாடியருளிய திருவாய்மொழியையும் வேதத்தோடு ஸமமாகக் கேட்டருளும்படி வரம் பெற்ற திருமங்கை மன்னன் திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணி நம்பெருமாள் திருவடிகளைத் தொழச் செய்வித்துத் திரும்ப ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளப்பண்ணினார். இவ்வுத்ஸவத்தை நடத்தி வைத்ததற்குப் பகுமானமாக நம்பெருமாள் தை அமாவாசையன்று தான் கண்டருளும் மஞ்சள் குளி உத்ஸவத்தைத் திருமங்கைமன்னன் கண்டருளும்படி அநுக்ரஹித்தார். அர்ச்சையில் இப்போதும் திருமங்கையாழ்வார், திருநாங்கூருக்குச் சமீபம் காவேரியின் பிரிவான மணிகர்ணிகையில் தை அமாவாசையன்று மஞ்சள் குளி உத்ஸவத்தைக் கண்டருளுகிறார். மறுநாள் திருநாங்கூரில் திருநாங்கூர் பதினொரு எம்பெருமான்களையும் ஆழ்வார் மங்களாசாஸனம் செய்தருளும் உத்ஸவமும் கருடஸேவை உத்ஸவமும் ஸ்ரீவைஷ்ணவன் ஒவ்வொருவனும் அவசியம் அநுபவிக்க வேண்டிய உத்ஸவமாகும். திருமங்கையாழ்வார், தாம் கண்டு பாடிய திருமால் திருப்பதிகளின் பாடல்களில் ஆங்காங்கு திவ்வியதேசங்களில் தம் முன்னோர்களான ஆழ்வார்கள் பாடிய பாடலாம் தெய்வத் தமிழ் மறையை வேதத்தோடொக்கப் பாடிக் கொண்டுவருவதை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் காட்டியருளியிருக்கிறார். இவ்வாறு திருமங்கை மன்னன் காலத்தில் பிரசாரமாகி வந்த திவ்வியப் பிரபந்தங்கள் நாதமுனிகள் காலத்தில் (சுமார் 100, 150 வருஷங்களுக்குள்ளாக) பிரசாரமின்றி மறைந்து விட்டது.

திருமங்கைமன்னன் ஏற்படுத்தின தமிழ்த் திருநாள் திருவாய்மொழித் திருநாள் எனப் பிரஸித்தமாயிற்று.

நாதமுனிகள் திருக்குடந்தைப்பதியில் (கும்பகோணத்தில்) "ஆராவமுதே" என்றாரம்பமாகும் திருப்பதிகத்தைக் கேட்டு அதன் முடிவில் "ஓராயிரத்துளிப்பத்தும்" என்று வருவதையும் கேட்டு, ஆயிரம் பாட்டையும் தாம் பெறவேண்டி நம்மாழ்வார் அவதாரஸ்தலமான திருக்குருகூருக்குச் சென்றார். மதுரகவி ஸம்பிரதாயஸ்தரான ஸ்ரீபராங்குச நம்பியிடம் ஆழ்வார் விஷயமான "கண்ணி நுண் சிறுத்தாம்பினால்" என்றாரம்பமாகும் பதிகத்தை உபதேசம் பெற்றுத் திருப்புளியின் கீழே ஆழ்வார் திருமுன்பே 12 ஆயிரம் உரு ஜபஞ் செய்து யோக தசையில் ஆழ்வாரை ஸாக்ஷாத்காரம் பண்ணினார். ஆழ்வார் முகமாகத் திருவாய்மொழியையும் மற்ற திவ்வியப் பிரபந்தங்களையும் உபதேசம் பெற்றார். பிறகு ஸ்வசிஷ்ய முகத்தாலே அனேகம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திவ்வியப் பிரபந்தங்களை ஓதியும் ஓதுவித்தும் உலகில் பரவும்படி பிரசாரம் செய்தருளினார். திருமங்கையாழ்வார் போல் நாதமுனிகள், ஒரு திருக்கார்த்திகைத் திருநாளன்று திருநெடுந்தாண்டகத்தைப் பாடி ஸ்ரீரங்கநாதனை உகப்பித்து வரம் வேண்டி மற்ற ஆழ்வார்கள் பாடல்களுக்கும்

வேதஸாம்யத்தைப் பெற்றுர். மார்கசீர்ஷ சுக்ல ஏகாதசிக்கு முன்னதாக 10 நாள் உத்ஸவம் கண்டருளி அதில் மற்ற ஆழ்வார்களின் திருமொழிகளையும் நம்பெருமாள் கேட்டுகந்தருளும்படிக்கு ஏற்பாடு செய்தருளினர். சப்தரஸப்பிரதான மான முதல் திருவந்தாதி முதலான இயற்பா என்ற பகுதியைத் திருவாய்மொழித் திருநாளுக்கு மறுநாள் இயலாகக் கேட்டருளும்படியும் திருமொழி திருவாய்மொழிகளை இசையுடனும் மதுரகவிகளைப் போலே அபிநயத்துடனும் கண்டருளும்படியும் வகை செய்தருளினர். திருக்கண்ணமங்கையில் தம் ஸஹோதரியின் குமாரர்களான கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் என்ற இருவரையுங்கொண்டு எம்பெருமான் திருமுன்பே தாளத்துடனும் இசையுடனும் மூவாயிரத்தை சேவிக்கும் படியும் இயற்பாவை இயலுடன் சேவிக்கும்படியும் நியமித்தார். அப்பரம்பரையினரே அரையர் திருவம்சஸ்தர்களாவார். இப்படி நாதமுனிகள் ஏற்படுத்தின திருமொழித் திருநாள் 10 திருவாய்மொழித் திருநாள் 10 இயற்பாத் திருநாள் 1 ஆக 21 நாள் உத்ஸவம் இப்போது ''**திருவத்யயன உத்ஸவம்**'' என்பதாகச் சிறப்பாகத் திருவரங்கம் பெரிய கோயிலிலும், பொதுவாக மற்ற எல்லாத் திருமால் கோயில்களிலும் இன்றளவும் நடைபெற்று வருகிறது.

நாதமுனிகளின் திருப்பேரனுரான ஸ்ரீ ஆளவந்தார், தம் நிர்வாஹ காலத்தில் எம்பெருமானின் ராமகிருஷ்ண வாமந நரஸிம்ஹாதி விபவாவதாரங்களின் சரித்திரத்தில் சில பகுதிகளை நாடகமாக அபிநயித்தநுபவிக்கும்படி நியமித்தருளினர். ஸ்ரீராமாநுஜர், தம் நிர்வாஹ காலத்தில் வெகு சிறப்பாக இவ்வுத்ஸவத்தை நடப்பித்தருளினர். தமது அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வான் திருவடிகளில் ஆச்ரயித்தவராய் பெரிய புலவருமாய் பரமஸாத்விகருமான அமுதனுருக்கு எம்பெருமான் கைங்கர்யமொன்று மில்லாமையைக் கண்டு தாமே அரையர் திருமாளிகைக்குச் சென்று அவர்களிடமிருந்து இயற்பாச் சுவடியை பிக்ஷையாகப் பெற்று அமுதனுரிடம் அதைக் கொடுத்து உபதேசித்துச் சுவடியை வைத்து வாசித்த வண்ணமே இயலாக இயற்பாவை எம்பெருமான் திருமுன்பே சேவிக்கும்படி திட்டம் செய்து அரையருக்கொத்த மரியாதைகளையும் அமுதனுருக்குச் செய்வித்தருளினர். அமுதனர் தம் பரமாசார்யரான ஸ்ரீராமாநுஜர் விஷயமாகப் பாடியருளிய "இராமாநுஜ நூற்றந்தாதி" என்ற பிரபந்தத்தை ஸ்ரீராமாநுஜருடைய ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் "பிரபந்த காயத்ரி" என நித்தியாநுஸந்தானமாகப் போற்றியநுஸந்தித்தும் திருவாய்மொழிக்குப் பிறகு அதை நியமமாகச் சேவித்தும் போந்தார்கள். ஸ்ரீமன் மணவாள மாமுனிகள், தம் நிர்வாஹ காலத்தில் திருமொழி திருவாய்மொழிகளில் முக்கியமான சில பதிகங்களில் சில பாசுரங்களுக்குப் பூர்வாசார்யர்கள் செய்தருளின வியாக்கியானங்களை அநுஸந்திக்கும்படியும் நியமித்தருளினர். இவ்விதம் இப்போது **நாலாயிர திவ்வியப் பிரபந்தமாம் தெய்வத் தமிழ் மறை**யைச் சிறப்பித்துப் போற்றும் வகையில் தமிழுக்கு ஆக்கந்தரும் தனிப் பெருந்திருவிழா நடைபெற்று வருகிறது.

கூடல் மாநகரில் (மதுரையம்பதியில்) பட்டர்பிரான், பரதத்துவ நிர்ணயம் செய்தருளிப் பாண்டியன் செல்வநம்பி முதலானேர் கொண்டாட யானையின் மேல் திருவீதி வலம் வரும் சமயம் எம்பெருமான் கருடாரூடனய் பெரியபிராட்டியாருடன்

சேவை சாதிக்க எம்பெருமான் வடிவழகில் ஈடுபட்டு இதுக்கு என்ன தீங்கு வருமோ எனப் பயப்பட்டு யானையின் மேலிருந்த மணியைத் தாளமாகக் கொண்டு எம்பெருமானைத் திருப்பல்லாண்டு பாடி மங்களாசாஸனம் செய்தருளினுர். ஆகவே இந்தப் பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டர் பிரானுக்குப் பெரியாழ்வார் என்னும் பெயர் பிரஸித்தமாயிற்று. நாதமுனிகள், திருப்பல்லாண்டை வேதத்துக்கு ஓம் என்னுமது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காயும் மங்களமாயுமிருப்பதைக் கண்டு திவ்வியப்பிரபந்தாநுஸந்தானத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் திருப்பல்லாண்டை அநுஸந்திக்கவேணும் என நியமித்தார். ஆரம்பத்தில் 12 பாட்டும், முடிவில் முதல் இரண்டு பாட்டும் சேவிக்கப்பட்டுவருகிறது. மேலும் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை ரஹஸ்யத்ரயார்த்த விவரணமாகக் கொண்டு திருப்பல்லாண்டு முதல் கண்ணிநுண் சிறுத்தாம்பு முடிய திருமந்த்ரத்தில் ஓம், நம:, என்ற இரண்டு பதங்களின் விவரணமென்றும், "வாடினேன் வாடி" தொடங்கி திருநெடுந்தாண்டகம் முடியவும், முதல் திருவந்தாதி முதல் பெரிய திருமடலீருகவும் நாராயணுய என்பதின் விவரணமாகவும், உயர்வற தொடங்கி உயர்ந்தே முடிவாகத் திருவாய்மொழி த்வயார்த்த விவரணமென்றும் பொருளமைதி கொண்டு ஆழ்வார்களின் அருளிச் செயல்களை வரிசைப்படுத்தினுர். இயற்பா சரமசுலோகார்த்த விவரணமென்றும் பெரியோர் கூறுவர். நம்மாழ்வார் வைபவத்தைப் பேசுமதான கண்ணிநுண்சிறுத்தாம்பு பாகவத விசேஷ சேஷத்வத்தை-ஆசார்யசேஷத்வத்தை விளக்குமதாய் திருமந்த்ரத்தின் நம: பதார்த்த விவரணமாயமைகிறது. அமலனாதிபிரானில் முதல் மூன்று பாட்டுக்களின் முதல் எழுத்து பிரணவத்தின் அ, உ, ம் என்ற எழுத்தாயமைந்து பிரணவார்த்த விவரணமென்பதைக் குறிக்கிறது. "நான் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம்" என்ருரம்பித்து நடுவில் "நானும் சொன்னேன் நமருமுரைமின் நமோ நாராயணமே" என்றும் முடிவிலும் "மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே" என்றும் கூறுமுகத்தால் நாராயணுய பதார்த்த விவரணமாகிறது இரண்டாவதாயிரம். "மாயன் உரைக்கிடக்குமுள்ளத்தெனக்குக் கூற்றமும் சாரா கொடுவினையும் சாரா" என்றும் "மாயன் அன்ருேதியவாக்கதனைக் கல்லார் உலகத்தில் ஏதிலராய் மெய்ஞ்ஞானமில்" என்றும் பேசுமுகத்தால் இயற்பா சரம சுலோகார்த்த விவரணமென்னலாம். த்வயத்தின் பொருளான உபாயத்தைப் பற்றுவதையும் ப்ராப்யமான (பயனுன) பகவத் கைங்கர்யத்தையும் "அகலகில்லேன்" என்ருரம்பமாகும் பாசுரத்திலும் "ஒழிவில் காலமெல்லாம்" என்ருரம்பமாகும் பாசுரத்திலும் தெளிவாக்குமுகத்தால் திருவாய்மொழி த்வயார்த்த விவரணமாகிறது.

"எம்பெருமானுக்கே உரியேனுனநான் எனக்குரியனன்றிக்கே ஒழிய வேணும்; ஸர்வசேஷியான (தலைவனுன) நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணும்" என்பதுவே திருமந்த்ரார்த்தஸாரம்—ஸகலவேத சாஸ்த்ரஸாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தமாம் ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் ஸாரம்.

ஸ்ரீ:

ஸ்ரீ மதுரவல்லீ ஸமேத ஸ்ரீ வ்யூஹ சுந்தரராஜாய நம:

விகனஸ மஹா குரவே நம:



# ஸ்ரீகூடலழகரும் அர்ச்சாவதாரமும்

ஸ்ரீ M. S. கோவிந்த பட்டர், கூடலழகர் ஸந்நிதி அர்ச்சகம் & ஸ்தாநீகம் மிராசு.

## ஸ்ரீ கூடலழகரின் அர்ச்சாவதாரப் பெருமை

ச்ரிய: பதியான கூடலழகர் மதுரை மாநகரத்திலே மண்டூக மஹரிஷிக்கு ப்ரத்யக்ஷமாகி ஸ்தானக ஆஸன சயனமாக மூன்று தளங்களிலும், த்ருவ கௌதுக உத்ஸவ ஸ்நபன பலிபேரம் என்று சொல்லப்படும் பஞ்சபேர விதானமாகவும் எழுந்தருளியிருக்கிறார். "ஆயுஷ்காம: சைலம்" என்பதாலே ஜீவாத்மாக்கள் எல்லோரும் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ த்ருவரை (மூலவரை) சிலா மூலமாக, பஞ்சபேரவிதானமாக, உத்தமமாக, அத்ரி ப்ருகு காசிப மரீசி முதலான மஹர்ஷி வாக்கியங்களாலே வைகானச ஆகம முறைப்படி ப்ரதிஷ்டை செய்யப் பட்டிருப்பதாலே அர்ச்சாவதாரரூபியான ஸ்ரீ கூடலழகருடைய பிரதிஷ்டை **ஆர்ஷிகம்** என்று பெருமை பெற்றது. சித்ரம் என்று ஆகம சாஸ்த்திரத்தில் சொல்லியபடி முன்புறமும் பின்புறமும் அழகாகச் செய்யப்பட்டு *சுந்தரம் புண்டரீகாக்ஷம் ஸர்வலோகைகநாயகம்,* என்றும் *ஸுரூபாம் ப்ரதிமாம் ப்ரோக்தா சோபனா த்ருஷ்டி ஹாரீணீ* என்பதைப் போலவும் அழகாக அர்ச்சாவதாரருபியாய் எழுந்தருளி இருப்பதாலே அழகர் என்றும், சுந்தரராஜன் என்றும் இடது திருக்கை யாலே அழைத்து வலது திருக்கையாலே அபயமளித்து வேண்டும் வரத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதாலே ஆஹூயவரதன் என்றும் திருநாமங்கள் கொண்டு சேவை சாதித்தருளுகிறார்.

## அஷ்டாங்க விமானத்தின் பெருமை.

விமானங்களுடைய ஸ்தானங்கள் மூன்று வகைப்படும்; 1) சதுராக்ருதி விமானம். 2) ஷண்ணவதி விமானம். 3) அஷ்டாங்க விமானம். சதுராகிருதி விமானலக்ஷணம் அதிஷ்டானம், பாதம், சிகரம், ஸ்தூபி ஆக நான்கு ஸ்தானங்கள் கொண்டது. ஷண்ணவதி விமானலக்ஷணம் அதிஷ்டானம், பாதம், ப்ரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆக ஆறு ஸ்தானங்கள் கொண்டது. அஷ்டாங்க விமான லக்ஷணம் அதிஷ்டானம், பாதம், பாதம், பாதம், ப்ரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி ஆக எட்டு ஸ்தானங்கள் கொண்டது. இவற்றுள் உத்தமமான அஷ்டாங்க விமானம்



முக்கோல் முனிவரரான திருமலை பெரிய கேள்வி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸுந்தர ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி யாகசாலையைக் குளிரக் கடாட்சித்தல்.

எனப்படும் விமானமானது* மதுராயாம் புரீகோஷ்ட்யாம் அஷ்டாங்கம் விஷ்ணு மந்திரம்* என்றும்* விமாநேவிச்வகர்மீயேஸதா ஸந்நிஹிதோஹரி :* என்றும் ஸ்தல புராணங்களிலே சொல்லியபடி விசுவகர்மாவினுலே கட்டப்பட்டு ஓம் நமோ நாராயணுய என்று சொல்லப்படும் அஷ்டாக்ஷரஸ்வரூபமான விமானம் என்று பக்தர்களால் போற்றப்பட்டு உலகம் புகழும் பெருமை வாய்ந்து விளங்குகிறது.

### திவ்யக்ஷேத்திரத்தின் பெருமை

மண்டூக மஹரிஷிக்குப் பிரத்யக்ஷமாகியும்* க்ருதமாலா தடே ரம்யே. கதளீஷண்டமண்டிதே*என்று புராணங்களிலேசொல்லியபடி இந்தக்ஷேத்திரத்தைச் சுற்றிலும் வாழை மரங்களாலே சூழப்பட்டும் திருவரங்கனுக்கு காவிரி நதியானது எவ்வாறு மாலை போல் செல்கிறதோ அதேபோல கூடலழகருக்கும் தென்புறம் கிருத மால் நதியும் வடபுறம் வைகை நதியும் மாலை போல் சென்று கொண்டிருக்க கிருத மாலா நதியின் கரையிலே கோவில் கொண்டும் எழுந்தருளி இருக்கிருர். மேலும் பெரியாழ்வாருக்கும் சேவை சாதித்து* பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூருயிரம் மல்லாண்ட திண்டோள் மணிவண்ணு* என்று பெரியாழ் வாராலே மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்ய க்ஷேத்திரம் என்னும் பெருமையும் வாய்ந்தது.

### திவ்யதேசத்தின் பெருமை

பாண்டிய நாட்டுத் திருப்பதிகளிலே பெரியாழ்வாரால் பல்லாண்டு பெற்ற திவ்வியக்ஷேத்திரத்துடன் திருமங்கையாழ்வாராலே* கோழியும் கூடலும் கோவில் கொண்ட கோவலரே ஒப்பர்* என்னும் மங்களாசாசனப் பாசுரத்தாலே இருவித உயர்வு கொண்டு 18 திவ்யதேசத்தில் உயர்ந்த பெருமை பெற்றது. அவாப்த ஸமஸ்தகாமனுன எம்பெருமான் ஸ்ரீகூடலழகருக்கு ஆலய ஜீர்ணேத்தாரணப் பிரதிஷ்டை வைகானஸ ஆகமப்படி பஞ்சதினுத்வரமாகச் செய்யப்பட்டது. ஸ்ரீகூடலழகரும் அஷ்டாங்க விமானமும் மனிதனுய்ப் பிறந்தவர்கள் எல்லோரும் சேவிக்கவேண்டும் என்றும் இந்தக் கும்பாபிஷேக மலரை வாங்கிச் செல்பவர்களும் கூடலழகரை சேவித்தவர்களும் ஆண்டாளைப் போல் அவர்களுடைய பந்துக் களிடமும் நண்பர்களிடமும் மலரைக்காண்பித்தும் ஸ்ரீகூடலழகரை சேவிக்கவநமாறு செய்து ஸ்ரீகூடலழகருடைய கிருபாகடாக்ஷத்தைப் பெற ஸ்ரீகூடலழகரிடத்தில் பக்திகொண்ட பக்தர்களான உங்களைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

**ஸ்ரீ மதுரவல்லீ ஸமேத ஸ்ரீசுந்தரராஜாய மங்களம்.**

ஸ்ரீ:

ஸ்ரீ மதுரவல்லி நாயகீ ஸமேத ஸ்ரீ ஸுந்தரராஜ பரப்ரஹ்மணே நம:



# அபிநவ தசாவதாரம்.

(தஞ்சை - என். எஸ். தாதாசார்யர்)

## முன்னுரை

ஓர் ஜநநாயக நாட்டின் அமைப்பில் ஓர் பரம்பொருள் போல், குடிஅரசுத் தலைவரும் அவருடைய கண்காணிப்பில் நிர்வாஹ அமைப்பான அமைச்சும் அதில் திட்டம், பொக்கிஷத்துடன் உள்துறையும் இராணுவமும் சிறப்புறுவது போல், சமய நிலையிலும் இம்மூன்றின் ஆட்சியில், பிரமன், திருமால், சிவபெருமான் (ருத்திரன்) என்பவரை நாம் ஒப்புக் கொண்டுள்ளோம். நாம் மட்டுமின்றி. பிதா—குமாரன்—பரிசுத்த ஆவி எனச் சிலரும் ஓஸரிஸ்—ஐஸிஸ்—ஹோரஸ் என எகிப்தியரும், ஓடின், பிரியா, தார் என ஸ்காண்டிநேவியரும், ஆனு—இயா—பேல் என ஆஸ்திரியரும், தௌலாக்—பான்—மொல்லாக் என துருயுதரும், கேதர்பிஞு—சொக்மா என யூதர்களும். அஹுருமஜதர்—மித்திரர்—அம்பரிமான் எனப் பாரஸீகரும் இன்னோரன்ன பலரும் இப்புடையில் மும்மூர்த்திகளின் அமைப்பை ஒப்புக் கொள்வார்கள். இம் மும்மூர்த்திகளுள் திருமால் வழிபாட்டை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர்களுள் தமிழ் நாட்டைச் சேர்ந்த ராமாநுஜ ஸித்தாந்தத்தின் கொள்கையைப் பின்பற்றுபவர்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் என அழைப்பார்கள். இந்த ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் குலபதியாக எழுந்தருளி அந்தணர் அந்தியில் உள்ள அனைவருக்கும் நேரிடையாக முக்திப் பெரு வீட்டை அடைய நெடுஞ்சாலையைக் காட்டியவரே நம்மாழ்வார் என்ற குருகூர்வள்ளல். அதன்பின் ஸ்ரீமந் நாதமுனிகளின் பெருமுயற்சியால் இந்த வைஷ்ணவம் திருவரங்கம் உபய காவேரி போல் உபய வேதாந்தக் கொள்கையால் இருபக்கமும் சூழப்பட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் காக்கப்பட்டது.

## ஆழ்வார்கள்

இன்று தமிழ்நாட்டில் நிலவும் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் அடிகோலிகளான ஆழ்வார்களைத் திவ்விய சூரிகள், ஆதிபக்தர்கள், மாலுகந்த ஆசிரியர்கள், பொய்யில் புலவர்கள், பாலேய் தமிழர், பத்தர், இசைகாரர் என்றெல்லாம் அழைப்பார்கள். "சூரிகள்" என்ற வடமொழிச் சொல்லை தீர்த்தர்கள், பேரடியார்கள், பரமைகாந்திகள். மெய்யடியார்கள் என்றும் ஒருவாறு அழைக்கலாம். திருநாடான ஸ்ரீவைகுந்தத்தில் என்றும் ஸாமகானம் பாடிக் கொண்டு திருமகள்கேள்வனை அடிபணிந்து அனுபவித்துக் கொண்

டிருப்பவர்களை "நித்ய ஸூரிகள்" என வைஷ்ணவம் அழைக்கும். அந்த நித்ய ஸூரிகளின் அம்சமாய் இந்நில உலகில் அவதரித்து எம்பெருமானுடைய கொள்ள மாளா இன்பவெள்ளமான திருக்குணங்களிலும் வடிவழகிலும் அநுபவம் மேலிட்டு ஆழங்காற்பட்டு, அந்த அநுபவம் மதகு வெள்ளம் போல் புறத்தேயும் வெள்ளம் கோத்தாற் போல் இன்தமிழில் இசை பாடிப் போந்த மகான்களையே ஆழ்வார்கள் என்போம். இவர்கள்தான், சேதனர்களான நம்மையும், பரம்பொருளான எம்பெருமானையும் சேர்த்து வைக்கும் இடைநிலைத் தூதுவர்கள். நம்மை ஆளவே இந்நிலவுலகில் அவதரித்த சிலர்களை இப்புடைகொண்டும் **ஆழ்வார்கள்** என அழைக்கலாம். ஆழ்வார்கள் என்ற திருப்பெயர் அமைந்த அழகை எத்துணை அநுபவித்தாலும் மாளாது. இஃது ஓர் அருமையான தமிழுக்கே உரிய உயர்தனிச் செஞ் சொல்லாகும். பொதுவாகக் குருபரம்பரை நூல்களிலும் திவ்யஸூரி சரிதம் என்ற வடமொழிக் காப்பிய நூலிலும் இந்த ஆழ்வார்களின் அவதாரகாலம், அம்சம் முதலியன பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இருப்பினும் ஸ்ரீவைஷ்ணவ **மாமேதை பேராசிரியர் ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன்** என்ற ஆசாரியர் இவர்களைப் பற்றிக் கூறும் பொழுது எம்பெருமானுடைய புதியதோர் தசாவதாரம் எடுத்த வகையே இவ்வாழ்வாரின் பரம்பரை என அருளினர். அதனை "**அபிநவ தசாவதாரம்**" என்று அழைத்தார். இச்சொல்லுக்கு எம்பெருமானுடைய ஓர் **புதிய தசாவதாரம்** என்று பொருளாகும். இத்தகைய மயர்வற மதி நலம் அருளப் பெற்ற திவ்விய ஸூரிகளான ஆழ்வார்கள் சௌநக பகவானைப் போல நம் தமிழ்நாட்டில் திருமாலின் உருவ வழிபாட்டிற்கு (அருச்சை) அடிகோலிகள்.

### அபிநவ தசாவதாரம்

"எம்பெருமான் **பராங்குச** (நம்மாழ்வார்), **பரகாலாதி** (திருமங்கை ஆழ்வார்) ரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி மேகங்கள் சமுத்திர ஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப்போல் வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே தமிழ் மொழியில் ஸங்கிரஹித்துத் காட்டியதாக **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலே "குருபரம் பராஸாரம்**" என்ற பகுதியில் ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளினர். மற்றும் இம் மகானால் அருளப்பெற்ற ஒப்பற்றதொரு துதி நூலான **தயாசதகத்தில்** 18-வது செய்யுளான **அபிநவ தசார்ப்பிதேன** என்ற செய்யுளிலும் "**தாயே, திருவேங்கடமுடையான் கருணையே! நீ எம்மனோர் யாவரையும் தம்முடன் ஒருமித்த நிலையில் ஆக்கிக் கொண்டாய். புதியதோர் தசை** யையும் பெற்றாய். **ஆகவே நீயே எம்பெருமானை முன்பு எடுத்த மீன் ஆமை என்ற வரிசை கொண்ட பத்து அவதாரம் போக மேலும் சேதநர்களை நல்வழிப்படுத்த ஆழ்வார்களின் வடிவத்தில் புதியதோர் தசாவதாரத்தை எடுப்பிக்கப் பண்ணி புதிய திரி இட்டதும் எண்ணெயிட்டது மான ஒளி விளக்கை அவர்களின் அருளிச் செயலின் வடிவாக ஏற்றினாய்**" எனவும் பணித்தார். சததூஷணி என்ற ஒப்பற்ற சித்தாந்தவாத நூலில் **56-வது வாதத்தில், ஆழ்வார்களைப் பற்றிப் பிரஸ்தாபித்து "ஆதி பக்தானும் அநந்த கருடா தீநாம். இச்சாவதூர பேதா**" என்ற பகுதியால் இவர்களைத் தந்நிச்சையில் தோன்றும் எம்பெருமானுடைய அவதாரத்துக் குறுப்பாய் அவதார புருஷர்கள் எனவும் காட்டி அருளினர். திருமாலுடைய அவதார வரிசையைச் சுருக்கமாக வருணிக்கும் பொழுது "**ஜலஜௌ வநஜௌ ஹ்ரஸ்வ:**

த்ரி ராம: கிருஷ்ண கல்கிநெள'' என்று கூறியபடிக்கு நீரில் தோன்றிய மச்சம், கூர்மம் காட்டில் தோன்றிய வராஹம், நரசிங்கம், மூன்று ராமர்கள், கிருஷ்ணன், கல்கி எனப் பத்தாகும். ஆழ்வார்களையும் பொய்கை, பூதம், பேயாழ்வார் என்றபடி பத்தாக்கிச் சிஷ்யனையும், ஆசானையும் ஒன்றுபடுத்தும் நிலையில் மதுரகவிகளை நம்மாழ்வாரையும் தந்தையையும் பெண்ணையும் ஒன்றுபடுத்தும் நிலையில் பெரியாழ்வாரையும் ஆண்டாளையும் ஒன்று படுத்தி பேசினார்கள். இப்பொழுது எம்பெருமானுடைய பத்து அவதாரங்களை ஆழ்வார்களின் அவதாரங்களுடன் ஒன்றுபடுத்தி ஒப்பிட்டும் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்காகும். இத்தகையதோர் சான்று நிறைந்த ஆராய்ச்சி அநுபவமானது முன்பே பெரியோர்களால் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. அதனைப் பின்பற்றியே அப்பெரியோர்களின் அடிச்சுவட்டில் இருந்து கொண்டு, ஈண்டு எழுதப்படுகிறது.

**நம்மாழ்வார்:- வாமனாவதாரம்:-**

ஆழ்வார்களின் வரிசையில் ஐந்தாமவரான, ஆனால் அவர்களுக்குள் அவயவியான (உறுப்பாளரான) நம்மாழ்வாரையும், வாமனனையும் இப்பொழுது ஒப்பிடலாம்.

1. வாமனன் ஐந்தாவது அவதாரம்: நம்மாழ்வாரும் ஐந்தாவது அவதாரம்.

2. இன்றைய திருக்குறுங்குடிக்கே "வாமனபுரீ" என்று புராணப்பெயர். கைசிக புராணம்* தத்ர சித்தாச்ரமே பத்ரே* என்று திருக்குறுங்குடியை அழைத்தது. வாமனன் எழுந்தருளிய இடத்திற்குச் சித்தாச்சிரமம் எனப் பெயர் உண்டு. மற்றும் "முன்பு நீரும் நாமும் குறுங்குடியாகக்கட்டி இருந்த ஆசிரமத்தில்" என்பதும் பட்டர்பபடி. குறுங்குடி நம்பி எம்பெருமானை "வீக்ஷஸ்வ வாமநபுரீ வநமாலி" என்று திவ்வியஸூரி சரிதம் அழைத்தது. நம்மாழ்வாரும் காரியாரும் உடையநங்கையாரும் வேண்ட இக்குறுங்குடி நம்பியின் அருளால் அவனே ஆழ்வாராக அவதரித்தார் என்பதும் சமயக் கொள்கை "நாமே உம்மிடம் வந்து பிறக்கிறோம்" என நம்பியே அருளியதாகச் சம்பிரதாயம். "நங்கள் கோலத் திருக்குறுங்குடி நம்பியை" என்ற பாசுரத்தின் ஈட்டுரையில் "உடைய நங்கையார் நம்பியை ஆச்ரயித்து ஆழ்வாரைத் திருவயிறு வாய்த்தார்" என அருளப்பட்டது. இதனை 'புத்ரஸ்தவ பவிஷ்யாமி புத்ரி கச்சேதி சாப்ரவீத்" என்ற திவ்வியஸூரி சரிதம் கூறிற்று. நம்பி என்ற திருப் பெயர் குறுங்குடிப் பெருமாளுக்கும் நம்மாழ்வாருக்கும் அஸாதாரணமாயிற்று. மாணியானதன்மையும் யோகநிலையும் இருவருக்கும் பொது நிலையாயிற்று. மேலும் பலபடியில் ஒற்றுமை உள்ளதாயினும் விரிவுக் கஞ்சி இத்துடன் இதனை நிறுத்திக் கொள்ளலாம். இதனால் வாமனனே நம்மாழ்வார் எனத்தேறி நிற்கும்.

**பொய்கையும் மச்சமும்.**

"ஸத்யவ்ரத க்ஷேத்திரம்" என்ற ஸ்ரீ காஞ்சீ புரியில்ஸத்ய விரதன் என்ற மன்னனுடைய தேசத்தின் ஜலத்திலே மீனாக அவதரித்து,



'முடிச் சோதியாய் உன் முகச் சோதி மலர்ந்ததுவோ'

அம்மன்னனுடைய கமண்டலு நீரிலே ஓர் இரவில் அடைபட்டு நெருக்குண்டதான கதை பாகவதப் பிரசித்தம். பொய்கை ஆழ்வாரும் ஸ்ரீ காஞ்சி புரியில் நீரிலே அதாவது பொய்கையில் அவதரித்துத் திருக்கோவலூரில் ஓர் இரவில் மூவருடன் நெருக்குண்டார். மச்சாவதாரம், ஸத்யவ்ரதன் மனத்தில் ஞான விளக்கேற்றினுர் என்பதற்கு "சிந்த்யர்த்ததீனவ" என்று புராணவசனம் காட்டியபடிக்கு இவ்வாழ் வாரும் நம் யாவருடைய மனத்திலும் "திருவிளக்காமென வையம் தகளி நூருக" என்ற பிரபந்தசார அருள்வாக்கிற் கிணங்க வையத் திருவிளக்கை ஏற்றினுர். மச்சாவதாரம் இன்று காணும் வரிசையில் முதல். பொய்கை ஆழ்வாரும் ஆழ்வார் களில் முதல்வர். இப்புடையில் இவர்கள் இருவருக்கும் ஒற்றுமை நயத்தைக் காணலாம்.

**பூதத்தாழ்வாரும் — கூர்மமும்.**

கூர்மாவதாரம் இரண்டாவது. பூதத் தாழ்வாரும் வரிசையில் இரண் டாமவர். "**அந்தரத: கூர்மம் பூதம்**" என்று கூர்மத்தைப் பூதம் என்றே வேதம் அழைக்கும். கடலும் கடலைச் சேர்ந்த இடமுமான இடைகழியில் நெருக்குண் டார். பகவானுக்கு ஹ்ரிஷீகேசன் என்றதொரு அஸாதாரணத் திருநாமம் உண்டு. இதற்குப் "**பொறிவாயில் ஐந்தவித்தான்**" எனப் பொருள் கொள்ளலாம். அத்தகைய புலனடக்கத்திற்குத் திருவள்ளுவரும் புராணங்களும் **ஆமையை** (கூர்மத்தை) முக்கிய உதாரணமாகக்கூறுவர். அதுபோல் ஆழ்வார்களில் தன்னையும் மறந்து பூதம் போல் நின்று மஹாஜிதேந்திரியராய் இந்த ஓடித்திரியும் யோகி ஆமை போலவே எழுந் தருளி யிருந்தார். அதனுலும் பூதத்தாழ்வாருக்கும் கூர்மாவதாரத்திற்கும் ஒற்றுமை நயம் உண்டு.

**பேயாழ்வாரும் — ஆதிவராஹமும்.**

ஆதிவராஹம் சிறப்பாகப் பூமிப் பிராட்டியிடத்தில் ஈடுபட்டது. பூமிப் பிராட்டியிடம் அளவற்ற பித்தராயிருக்கும் ஆதிவராஹாவதாரத்தை இட்டுப் பேசும் போது எல்லாப் புராணங்களும் "**மஹா வராஹ**" "**மஹதே போத் ரிணே**" என்றெல் லாம் குறிப்பிடும். இவ்வாழ்வாரையும் "**மஹதாஹ்வய**" என்ற படிக்கு **மஹத் சப்தத்** தால் நிர்த்தேசிப்பதுண்டு. அதனுல் இவ்விருவருக்கும் ஒற்றுமை நயம் ஏற்படும்.

**திருமழிசை ஆழ்வாரும் — நரசிங்கமும்.**

ஸ்ரீ பாகவதவசனப்படிக்கு "**அக்ருஷ்ட பச்யமான**" இந்த பூமியில் உள்ள ஹிரணியன் ஆண்ட இடமெல்லாம் "**மஹீஸாரமா**" யிற்று. திருமழிசையும் **மஹீஸார க்ஷேத்திர** மாயிற்று. நரசிம்மம் ஸ்தம்பத்தில் (தூண்) தான் அவதரித்தார். ஆழ்வாரும் ஸ்தம்பத்தில் தான் அவதரித்தார். (கோரைப் புதர்) "ப" அக்ஷரங்கள் 4-வது 3-வது என்ற மாறுபாடு தான். நரசிங்கம் இரணியனை உகிரால் கிளர்ந்த

படிக்கு இவ்வாழ்வாரும் முக்குறும்பை அறுக்கும் நோக்குடன் கருப்பு நெல்லை நகத்தால் "கிருஷ்ணனும் வ்ரீஹீணும் நகநிர்ப்பின்னம்" என்ற மந்திரக் கருத்தைச் செயல் முறையில் எடுத்துக் காட்டினர். திருப்பெரும் புலியூரில் யாகத்தில் முதல் மரியாதையை ஆக்ஷேபித்த சமயத்தில் உக்கிரமாக ஆனர் ஆழ்வார். கோளரி மாதவனும் உக்கிரமான அவதாரம் என்பதைப் புராணங்கள் கூறும். ருத்ரன் மந்த்ரராஜபத ஸ்தோத்திரத்தினல் நரசிங்கப் பெருமாளைத் துதித்தார். இவ்வாழ் வாரையும் ருத்ரன் புகழ்ந்து "பக்திசாரர்" எனப் பெயரிட்டதாகக் குருபரம்பரை கூறும். இத்தகைய நிலைகள் ஒத்திருப்பதால் இரண்டிலும் ஒற்றுமையைக் காணலாம்.

**குலசேகராழ்வாரும் — பரசுராமரும்.**

அவதார முறையிலும் இருவரும் ஆறுமவர்கள் ஆவார்கள். பரசுராமரும், குலசேகரரும் கேரளத்திலே அவதாரம். இருவர்களுக்கும் புனர்வசு நக்ஷத்திரமே. பரசுராமர் தாயாரின் சம்பந்தத்தினல் ஆயுதம் ஏந்தியும், தந்தையின் தொடர்பால் பூணூல் தரித்தவராகவும் இருந்தது போல் இவ்வாழ்வாரும் இருப்பர். பரசுராமா வதாரத்தில் முதலில் பெருமாளிடம் பகைமை கொண்டாலும் பிறகு பரசுராமர் ராமபக்தியே உருவாய் அமைந்தவர் என்பது வெளிப்படை. இப்புடைகளில் இருவரும் ஒத்தும் ஒன்றியும் இருப்பார்கள்.

**பெரியாழ்வாரும் — ஸ்ரீராமனும்.**

இருவரும் அவதார வரிசையில் ஏழாமவர். இருவருக்கும் "திரு அரங்கன்" குலதைவம். பெரியாழ்வார் கிழி அறுத்துப் பரதத்துவ நிர்ணயத்தை மதுரை மாநகரில் செய்தார். இராமனும் பரசுராமன் தந்த வில்லை இழுத்துத் தன் பரத் வத்தை வெளியிட்டருளினன். ஆழ்வாருடையது **வித்யா சுல்கம்**; பெருமாளுடையது **வீர்ய சுல்கம்** என்ற பேதம் தான். இவ்வகையில் ஒற்றுமை இருவருக்கும் நிலைத்து நிற்கும்.

**தொண்டரடிப்பொடியும் — பலராமனும்.**

பலராமனைப் பற்றிப் பேசும் ஸ்ரீ பாகவத புராணம் "சேஷாக்யம் தாப மா மகம்" என்ற பெருமாள் திருவாக்கினல் பலராமனைக் கண்ணனுக்குச் சேஷவ்ருத்தி செய்யும் சேஷனுகக் கூறும். தொண்டரடிப் பொடியாழ்வாரும் 'உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்" என அருளும் முகத்தாலும் **விப்பிர நாராயணன்** என்ற பெயரைத் தொண்டரடிப்பொடி என அழைக்கும்படி உகந்த செயலாலும் எம்பெருமானுக்கு ஆட்பட்டிருக்கும் பாரமைகாந்திய நிலையையே தமக்குற்ற பெருமையாக நினைத்

தார். பலராமனது திருக்கைகளில் "ஸீரபாணி" "ஹலாயுத:" என்ற திருப் பெயருக்கு இணங்க உலக்கை கலப்பைகள் ஆயுதங்களாகத் துலங்கும். ஆழ்வாரின் கைகளில் பூக்கூடையும் அலக்கும் என்றும் அங்கமாகத் துலங்கும். இந்நிலேகளே யிட்டு இவ்விருவர்களுக்கும் ஒப்புவமை காட்டலாம்.

**திருப்பாணுழ்வாரும் — கண்ணபிரானும்.**

இருவரும் 9-வது அவதாரம். **ரோஹிணி நக்ஷத்திரம் புதன் கிழமை** இருவருக்கும் அவதார நன்னுள். கண்ணன் குழலூதி ஆயர் உள்ளம் கொள்வான். திருப்பாணுழ்வார், யாழிசைத்துப் பண்பாடி அரங்கன் திருவுள்ளம் உகக்க வைத்தார். கண்ணன் தேரிலே அமர்ந்து ஸர்வ வேதாந்த ஸாரமான கீதையை அருளியது போல் நம் பாண நாதனும் லோக ஸாரங்கர் தோளிலே அமர்ந்து சென்று கொண்டிருக்கும் பொழுதே நிகில வேத - வேதாந்த ஸாரமான "அமலனுதி பிரான்" என்ற தசகத்தை அருளினுர். இந்த முறைகள் இருவர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும்.

**கலியனும் — கல்கி அவதாரமும்.**

இருவரும் கடைசி அவதாரம் எடுத்துக் கடைக் குட்டிகளானுர்கள். எம்பெருமான் திருப் பெயரில் அமைந்த "கல்கி" என்ற சொல்லின் தொடர்பு கொண்டது போல் திருமங்கை ஆழ்வாரும் **கலியன்** என்ற திருநாமம் திவ்விய தம்பதிகளால் அளிக்கப்பட்டார். கல்கி அவதாரத்தில் பெருமாள் வெள்ளைக் குதிரைவாகனமேறி, துஷ்டர்களே அழிக்க வாளேந்திப் பூமியில் உலாவினுர். இந்தக் கலியனும் "**ஆடல்மர**" என்ற வெள்ளைக் குதிரையில் அமர்ந்தே சத்ரு நிரஸனம் செய்தார். இவ்வைபவங்கள் இருவரையும் ஒன்ருக்கியது எனலாம்.

உ

# அருள்மிகு சாலைக் குமாரசுவாமி திருக்கோயில்

## திருநெல்வேலி சந்திப்பு.

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் தொன்னகரம் திருநெல்வேலி. இதன் சந்திப்பில் இம்மை மறுமை இன்பங்களை அளிக்கும் எழிற் கடவுளாக எழுந்தருளி யிருக்கிறார் அருள்மிகு சாலைக் குமரன். காலையிலும் மாலையிலும் கருணைபொழியும் இவரது திருக்கோலத்தைக் கண்டின்புறக் கூடுவோர் தொகை கணக்கிலடங்கா. ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் விபூதிக் காப்பும், வெள்ளிக்கிழமையன்று, சந்தனக் காப்பும் சாத்தி இவரது அழகுக்கு மேலும் அணி செய்யப்படுகிறது. கந்த சஷ்டி விழாவும், பாவை மாநாடும் சிறப்புற ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இங்கு அடிக்கடி பஜனை, சொற்பொழிவு, இன்னிசை ஆகியன நடந்த வண்ணமிருக்கின்றன. இதன் வருமானமும், அதனையொட்டி நற்பணிகளும் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வருகின்றன. ஏழைகளுக்கு இலவசத் திருமணம் செய்விக்கப்படுகிறது. இதன் பிராகாரத்தையும், முன் மண்டபத்தையும் எழுப்பும் திருப்பணி அடுத்துத் தொடங்கப்பட உள்ளது. ஆகவே எண்ணிய எண்ணியாங்கு எய்தி, வாழ்வில் எல்லா நலமும் பெற்றுய்ய அருள்மிகு சாலைக் குமாரப் பெருமானை வந்து வணங்கி இயன்ற அளவு காணிக்கை செலுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. வி. என். சண்முகம்,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**திரு எம். சண்முகம் M. C.,**

**திரு சேலம். திருநாவுக்கரசு,**
அறங்காவலர்கள்.

**R. S. கனிராஜ்** பி. ஏ.
நிர்வாக அதிகாரி.



பூரண பொற்குடம் புறப்படுதல்

# மலருக்கோர் மகிழ்ச்சி உரை.

( **வி. சௌ. கோதண்டபாணி**, பி. எஸ்சி. பி. எல்., **துணை ஆணையர், மதுரை** )

**கோழியும் கூடலும் கோயில்கொண்ட கோவலரே ஒப்பர் குன்றமன்ன**
**பாழியந் தோளும் ஓர் நான்கு உடையர் பண்டு இவர் தம்மையும் கண்டு அறியோம்**
**வாழியரோ! இவர் வண்ணம் எண்ணில், மாகடல் போன்றுஉளர் கையில் வெய்ய**
**ஆழி ஒன்று ஏந்தி, ஓர் சங்கு பற்றி, அச்சோ! ஒருவர் அழகிய வா**

## முன்னுரை

நம் தாய் மொழித்தமிழுக்கு உலகச் சிறப்பான மொழிகளுள் ஒரு பெருமையான இடம் உண்டு. ஒரு உயர் தனிச் செம்மொழிக்கு இருக்கவேண்டிய சிறப்பியல்புகளனைத்தும் தமிழில் அமைந்திருப்பதே அதற்குக் காரணம். தமிழ்மொழி "**கரும்பும் கசக்கும் கனிமொழி**" என்பதுடன் அதில் என்றும் குறையாத சமயம் பற்றிய நறுமணம் வீசிக்கொண்டிருக்கும். **அமுதனுர்** என்ற ஸ்ரீ வைணவ ஆசாரியார் இக்கருத்தை நூற்றந்தாதியில் அருளியுள்ளார். மாறுபட்டதாகக் கூறப்படும் உலக முக்கியச் சமயங்கள் யாவும் தமிழ்மொழித் தென்றலில் உலாவும் பொழுது ஒன்றுபட்டு, உரிமை பெற்றுத் தெய்வ நெறியை நோக்கிக் கை கோத்துப் பீடு நடைபோடும் என்பதும் உண்மை. சான்றுகக் கீழ்வரும் செய்யுளை நோக்கலாம்.

"பொற்சைவ வைணவமும் புத்தர் பிரான் பொன்னுரையும்
நற்சமணக் கிறித்துவரும், நபிகள் பிரான் நல்லுரையும்
பற்பலவாய் இருந்திடினும் பைந்தமிழின் பண்பேற்றுக்
கற்போரைப் பிடித்து இழுத்துக் கனிதமிழின் சுவையூட்டி
நாயன்மார் நாவ முதும் நல்லாழ்வார் பாசுரமும்
காவியமாய் இந் நாட்டில் கதிர்வீசக் காண்கின்றோம்."

இத்தகைய முத்திக் கினிய முத்தமிழும் கடல் முத்துக்களும் என்றும் கொழிக்கும் பாண்டிய நாட்டிற்கு ஓர் ஒப்பற்ற சிறப்புண்டு. கிட்டத்தட்ட 480 பெரும் தமிழ்ச் சங்கப் புலவர்கள் சங்கம் அமைத்து தமிழ் ஆராய்ச்சி செய்த நன்னடும் இதுவே. "பாண்டிய நாடு முத்துடைத்து" என்ற பழமொழிக்கு இணங்க நாயன்மார்களில் தலைசிறந்த மாணிக்கவாசகரும் ஆழ்வார்களுக்குள் ஆத்மாவான நம்மாழ்வாரும் இப்பாண்டிய நாட்டில் அவதரித்தார்கள். மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வான அங்கயற்கண்ணியும் பெரியாழ்வார்

பெற்றெடுத்த பெரும் பாக்கியமான அன்னை ஆண்டாளும் விரும்பி அவதரித்த நன்னாடும் இதுவே. இந்தப் பாண்டிய நாட்டிலேதான் நால்வகை நிலங்களையும் ஒருங்கே காணமுடியும். இந் நிலங்களில்தான் இலக்கியத் தமிழும் சமயத் தமிழும் திருவிளையாடல் புரிந்தன. சங்க நூல்களில் தமிழ் நாட்டுப் பண்பிற்கும், சிலம்பு, மணிமேகலை முதலிய காப்பியக் கருத்துக்களுக்கும் மையம் பெற்றது பாண்டியநாடு என்றால் மிகையாகாது. இந்நாட்டின் தலைநகராய் தமிழ்நாட்டின் மாபெரும் நகர மாய் விளங்கும் மதுரையின் சிறப்புகள் அருள்மிகு மீனாட்சி அம்மையின் கோபுரங் கள்போல வான்முத்தமிடுகின்றன. வடமதுரையில் கண்ணன் திருவிளையாடல் என்றால் இத்தென் மதுரையில் சிவபெருமான் திருவிளையாடலும் அத்துடன் "கண்ணுதற்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணிறந்தெரிந்தாய்ந்த" என்றபடிச் சிவபெருமான் சங்கத் தலைமைப் பதவி ஏற்றுத் தமிழ் வளம் காத்ததும் இப்பதியிலே தான். அத்துடனின்றி இம்மதுரையிலேதான் தாமரைக் கண்ணன் எம்பெருமான் (கூடல்) அழகர் பெரியாழ்வாரின் ஊர்வலத்தைக் காணக் கருடன்மேல் இருதேவிமார்களுடன் அமர்ந்து வானவீதியில் பவனி வந்து உய்வித்தார் என்றால் மதுரையின் சிறப்புக்கு மாற்றம் உண்டோ? மாசிவீதிக்கோர் மாயனும், சித்திரைவீதிக்கோர் ஆதிரையானும் அமைந்த பெரும் பதியன்றோ மதுரை.

## 2. பல்லாண்டு விளைந்த இடம்

இறைவனுக்கும் பல்லாண்டு பாடி, பேரமர் காதலைக் காட்டும் குற்றமற்ற துணிச்சல் கொண்டது தமிழ்ச் சமயநெறி என்பதற்குச் சான்று சிவனடியாரான சிதம்பரம் சேந்தனாரும் மாலுகந்த மாபெரும் ஆசிரியரான திருவில்லிபுத்தூர் வள்ளல் பெரியாழ்வாரும் ஆவார். இதனால் தான் ஏனைய ஆழ்வார்களுக்கும் கிடைக்காத பெரியாழ்வார் என்ற அரும்பெருமை விஷ்ணு சித்தராகிய இவருக்கு ஏற்பட்டது. பெரியாழ்வார் பல்லாண்டுப்பதிகத்தில் பரமேட்டியை பவித்திரனை, என்று புகழ்ந்த பெருமான் நம் ஸ்ரீ மதுரவல்லி சமேத ஸ்ரீ வ்யூகசுந்தரராஜன். ஸ்ரீ வடபத்திர சாயியினுடைய ஆணை கனவில் பிறக்க பாண்டியன் ஸ்ரீ வல்லபதேவன் கூட்டிய மாபெரும் சமய மாநாட்டில் திருமால் பரத்துவத்தை நிலைநிறுத்திப் பொற்கிழி அறுத்த பெரியாழ்வாரின் பொன்னடிபட்ட திருவீதிகள் அன்றோ, மதுரையின் சிறப்புக்கு முன்னுரையாக இருக்கிறது. திருமால் பரத்துவத்தைச் சாத்திரச் சான்றுகளுடன் பேரறிஞர் அவையில் நிலைநாட்டிய பின் மன்னன் வல்லபதேவனே கைதாங்கிச் சாமரமிட யானையின் மேல் பவனிவரும் பெரியாழ் வாரை திவ்வியதம்பதிகளுடன் சொக்கச்சுந்தரன் கருடன்மேல் எழுந்தருளி மதுரை நகர் வானத்தில் எட்டுத் தடவை வட்டமிட்டான் என்றால் மதுரையின் பெருமைதான் என்னே? திவ்வியப்பிரபந்தங்களுக்கே பிரணவம் போன்ற **'பல்லாண்டுப் பதிகம்'** விளைந்த ஸ்ரீவைணவ அருளிச்செயல்களின் நாற்றங்காலே மதுரைமா நகரம். சங்கத் தமிழில் மிகவும் மெச்சிப் பேசப்படுகின்ற தமிழர்களின் அரும் தெய்வமான கள்ளழகரும் அவர் எழுந்தருளியிருக்கும் திருமாலிருஞ் சோலைமலையும் அருகே உள்ளதுமட்டுமின்றி அந்த எம்பெருமான் ஆண்டிற்கொரு தடவை மதுரை நகரில் எழுந்தருளி வைகையில் பரிமேலழகராகச் சேவை

தருகிறுர் அன்றே! அம்மட்டோ! ஆழ்வார்களின் மங்களாசாஸனத்தில் சிறப்பாக அமைந்த **திருமோகூர் வழித்துணைப் பெருமாள்** என்ற **காளமேகப் பெருமாளும்** அருகே எழுந்தருளி அருட்கடைக்கண் செலுத்தும் பெருமை பெற்றதே மதுரை மாநகரமாகும். வழித்துணைப் பெருமாளை தரிசிக்காத ஒரு வைணவனுக்கு நற்கதியே கிடைக்காது என்று கூடத் திருமோகூர்ப் பெருமான் சிறப்பை ஸ்ரீவைணவப் பெரியோர்கள் பேசுவார்கள். நம்மாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளும் பொழுது மறுமுறை கடைசியாக இவ்வூர் எம்பெருமானை அன்றே தரிசித்து விடை பெற்றுர்.

## 3. அருளிச் செயல் பெற்றதலம்

ஸ்ரீவைணவ சமயத்தின் அடிப்படைத் தத்துவமாகிய **குறி, நெறி, நெறியாளர்** என்ற முக்கொள்கைகளில் **குறி** என்பது உருவ வழிபாட்டுக்குரிய அருச்சை எம்பெருமானையே குறிக்கும் என்றும், **நெறி** என்பது அருளிச் செயல்களின் சாரமான **சரணுகதியையே** குறிக்கும் என்றும், **நெறியாளர்** என்பது ஆழ்வார் ஆசாரியர்களின் **திருவடிசம்பந்தம்** பெற்றவர்களையே குறிக்கும் என்பதும் முன்னேர் கண்டமுறை. உபய வேதாந்தங்களாகிய **பிரமாணமும்,** நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானுர் போன்ற ஆசாரியர்களாகிற **பிரமாதாக்களும்,** சரணுகதியினுலும் அவன் அருளாலும் அவனை அடைந்து அவனுக்குரிய தொண்டுக்கே தொண்டென்று ஒழுகும் **ஹிதமும்** நாராயணனே பரம்பொருள் என்ற உண்மையும் அடங்கிய **பிரமேயங்களும்** ஸ்ரீ வைணவத்துக்கே அமைந்த பெரும் தத்துவம். வேதகாலம் முதல் திருமால் வழிபாடு என்பது உலகம் முழுவதிலும் பரவியதாகயிருந்தது. தமிழ்நாட்டில் கி. பி. முதலாம் நூற்றுண்டிற்கு முன்னரே திருமால் வழிபாடும் அவரே முல்லைநிலக் கடவுளான நம்பின்னைமணுளனுன **கண்ணபிரான்** என்ற உண்மையும் பரவி இருந்தது. வியூஹாவதாரக் கொள்கைகளும் அதற்குப் பின்னர் தமிழ்நாட்டில் பிரசித்தமாயிற்று. இதற்குச் சான்றுக இன்றைய 108 திருமால் திருப்பதிகளுள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாச்சியார் கோயில் என்ற திருநறையூரும் நம் மதுரைக் கூடலழகர் கோயிலும் சான்றுகும். பெரும் பாணுற்றுப் படையில் "பெறற்கருந் தொல்சீர்த் துறக்கமேய்க்கும் அருந்திறற் கடவுள்" என்ற அடியால் மேலான வீட்டைத் தரவல்லவன் திருமால் எனக் குறிப்பிட்டது கூடலழகர் பாலும் பொருந்தக் கூறலாம். 'மனக்கொள் நீ எனக்கு எனவடிவு வேறில்லை' என்ற பரிபாடலின் பாவடி இக்கூடலழகனை மையமாகக் கொண்டது என்றுலும் மிகையாகாது. பெரியாழ்வார் பல்லாண்டு பாடியதன்பயனுல்தான் போலும் நம் சுந்தரத்தான் திருமேனி வனப்பும், திருமுகப்பொலிவும், முகத்துக்கோர் நகையான மந்தஹாஸமும் அப்பொழுதைக்கப் பொழுது ஆராவமுதமாய் பக்தர்களின் கண்களுக்குப் பணியாரமாய் பல்லாண்டு வாழ்கின்றன என்பதை அனுபவித்தவர்கள் உணரலாம்.

## 4 அஷ்டாங்க விமானம்

